பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி 13 திங்கட்கிழமை (29.08.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :276

அதிபர் தேர்தலில் ஆதரவு பெறும் விடயத்தில்

# ஜனாதிபதி - பிரதமர் மோதல்

# தீவிரமடைகிறது ஜே.வி.பியால்!

## தலைமையை உதாசீனம் செய்ய கங்கணம் கட்டுகின்றார் மஹிந்த





கொழும்பு,ஓகஸ்ட் 29

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு ஜே.வி.பியினரின் ஆதரவைப் பெறும் விடயத்தில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான முரண்பாடு மேலும் தீவிரமடைந்து உச்சநிலையை எட்டியுள்ளது. ஜனாதிபதியின் அறிவுறுத்தல்களை உதாசீனம் செய்து ஜே.வி.பியினர் பக்கம் சாய பிரதமர் முற்படுவதே இதற்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தலில் வெற்றிபெறவேண்டுமானால் ஜே.வி.பியினரின் ஆதரவு நிச்சயம் தேவை என்று பிரதமர் கருதுகிறார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன. இதனால் ஜே.வி.பியினருடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்வதற்குக்கூட அவர் தயாராகிவிட்டார் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் கூறுகின்றன. ஆனால், ஜே.வி.பியினருடன் இணைவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதில் ஜனாதிபதி மிகப் பிடிவாதமாக நிற்கிறார். இதனால் அவர்கள் இருவரிடையேயுமான மோதல் முற்றுகின்றது என்கின்றன தகவல் அறிந்த வட்டாரங்கள்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பியினரின் ஆதரவுடன் களத்தில்இறங்குவது என்பதில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தீவிரமாக இருக்கிறார். இதற்காக ஜே.வி.பி. முக்கியஸ்தர்களுடன் அவர் தொடர்ந்து இரகசியப் பேச்சுகளை நடத்திவருகிறார்.

எதிர்வரும் ஆறாம் திகதி நடைபெறவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சம்மேளனத்தின் பின்னர், ஜனாதிபதித் தேர்தலில் தமது ஆதரவை வழங்குவதற்காக ஜே.வி.பி. முன்வைத்திருக்கும் கோரிக்கைகளைப் படிப்படியாக நிறைவேற்றுவதற்கு பிரதமர் மஹிந்த உறுதியளித்திருக்கிறார் எனவும் செய்திகள் கூறுகின்றன.

ஜே.வி.பியின் ஆதரவு தேவைப்படுவதால் அவர்களுக்கு எதிரான செய்திகளுக்கு அரசாங்க ஊடகங்கள் முக்கியத்துவமளிக்கக் கூடாதென்றும் -

ஜே.வி.பியினருக்கு எதிரான கருத்துகளை அரசாங்க முக்கியஸ்தர்கள் வெளியிடக்

(14ஆம் பக்கம் பார்க்க)

ஜாதிக ஹெல உறுமய திட்டவட்டமாக அறிவிப்பு

## நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளும் ஜனாதிபதி வேட்பாளருக்கே ஆதரவு

### மஹிந்த, ரணிலை நேற்றுச் சந்தித்துப் பேச்சு

கொழும்பு, ஓக.29

ஜாதிக ஹெல உறுமயவின் கோரிக்கைகளை - நிபந்தனைகளை - ஏற்றுக்கொள்ளும் ஜனாதிபதி வேட்பாளருக்கு மட்டுமே தமது ஆதரவு கிட்டும் என்று அக்கட்சி தெரிவித்துள்ளது. கட்சியின் இறுதி முடிவு எதிர்வரும் மூன்றாம் திகதி வெளியிடப்படும் என்றும் அதன் தலைவர் வண. எல்லாவல மேதானந்த தேரர் நேற்று செய்தி ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர்களான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை நேற்று ஜாதிக ஹெல உறுமயவின் பிரதிநிதிகள் சந்தித்துத் தமது கோரிக்கைகள் - நிபந்தனைகள் - அடங்கிய மகஜரைக் கையளித்தனர்.

எதிர்வரும் 3ஆம் திகதி கொழும்பு விகாரமகாதேவி பூங்கா மைதானத்தில் நடைபெறவுள்ள ஜாதிக ஹெல உறுமயவின் வருடாந்த மாநாட்டில் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற விடயத்தைக் கட்சி பகிரங்க மாக அறிவிக்கவிருப்பதாகவும் வண. எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமயவினரின் நிபந்தனைகளை ஏற்றுச்செயற்படுவதாக இரு ஜனாதிபதி வேட்பாளர்களும் நேற்று உடனடியாக எவ்வித உறுதிமொழியையும் வழங்கவில்லை எனத் தெரியவருகிறது. தமது நிபந்தனைகளை ஏற்கவில்லை எனில் அநேகமாக ஜாதிக ஹெல உறுமயவினர் இரு வேட்பாளர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஹெல உறுமய ஆதரவைப் பெற்றால் பிரதமருக்கு ஆதரவளிப்பதில்லை

### ஜே.வி.பி. உறுதிபடத் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.29

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் ஆதரவைப் பெறுவதற்குப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்தால் பிரதமருக்குத் தமது கட்சி ஆதரவே தராது என்று ஜே.வி.பி. உறுதியான முன்நிபந்தனையொன்றை விதித்திருக்கிறது என்று தெரியவருகிறது.

ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்து அவர்களின் ஆதரவுடன் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதற்குப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஏற்கனவே திட்டங்களை வகுத்திருக்கிறார் என்று கூறப்படுகிறது. இந்த நிலையில் தமது நிபந்தனைகள் சிலவற்றை ஏற்றுக்கொண்டால் ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவை வழங்குவதற்குத் தயார் என பிரதமரை நேரில் சந்தித்து ஜாதிக ஹெல உறுமயவும்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தல்: ஜே.வி.பி இன்று முடிவு?

கொழும்பு, ஓக.29

ஜனாதிபதித் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதா? அல்லது போட்டியிடும் வேட்பாளர்களில் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதா? என்பது குறித்த ஜே.வி.பியின் அறிவிப்பு இன்று வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தலில் தமது ஆதரவை வழங்குவதற்கு அக்கட்சி விடுக்கவுள்ள 12 நிபந்தனைகள் பற்றியும் இன்று அறிவிக்கப்படவுள்ளது. (14ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படைக்கு புதிய தளபதி?

கடற்படை தளபதி ரியர் அட்மிரல் தயா சந்தகிரி நாளைமறுதினம் புதன்கிழமை ஓய்வு பெறுகிறார். புதிய கடற்படைத் தளபதியாக வைஸ் அட்மிரல் வசந்த கரன்னகொட நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் -

இவரது பதவியேற்பு நிகழ்வு இன்று ஜனாதிபதி மாளிகையில் இடம்பெறும் என்றும் கூறப்படுகின்றது.

கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதியாகவும், முப்படை மற்றும் பொலீஸ் ஒருங்கிணைப்பாளராகவும் திருமலை மாவட்டத்தில் பணியாற்றியவர் கரன்னகொட. (க)

## இளைஞர் கொலை!

கொழும்பு,ஓக.29

சுட்டுக்கொல்லப்பட்ட நிலையில் வீசப்பட்டிருந்த தமிழ் இளைஞர் ஒருவரின் சடலத்தை கொழும்பு, தெஹிவளைப் பகுதியில் நேற்றிரவு 8.30 மணியளவில் பொலீஸார் மீட்டுள்ளனர். தெஹிவளை, பாத்தியா மாவத்தையிலிருந்து இந்தச் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது என்று பொலீஸார் கூறினர்.

கொல்லப்பட்ட இளைஞர் ஜீவரட்ணம் சிவரூபன் (வயது 24) என்றும், இவர் வெள்ளவத்தை பீற்றர்சன் வீதியைச் சேர்ந்தவர் என்றும் - அவரிடமிருந்த ஆவணங்கள் சிலவற்றில் இருந்து தெரியவருகின்றது எனப் பொலீஸார் தெரிவித்தனர். (க)

## கதிர்காமர் கொலை: தோட்டக்காரர் கைது!

கொழும்பு,ஓக.29

கதிர்காமரைச் சுட்டுக்கொன்ற தாக்குதலாளிகளால் பயன்படுத்தப்பட்ட வீட்டுக்கு அருகிலுள்ள இல்லத்தின் தோட்டக்காரர் கைதாகியுள்ளார் எனப் பொலீஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

கதிர்காமரைக் கொலைசெய்யப் பயன்படுத்தப்பட்ட வீடு தளையசிங்கம் என்பவருக்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கைகள் கட்டப்பட்ட நிலையில் 2 இளைஞர் சடலங்கள் மீட்பு!

### களுத்துறை, தெபொன காட்டுப் பகுதியிலிருந்து

கொழும்பு, ஓக.29

களுத்துறை, தெபொன என்ற இடத்தில் உள்ள காட்டுப் பகுதியிலிருந்து இரண்டு இளைஞர்களின் சடலங்கள் கைகள் கட்டப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை தமிழ் இளைஞர்களுடையவை என்று பொலீஸார் தெரிவித்தனர்.

சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் இவர்கள் மேற்படி காட்டுப் பகுதிக்குக் கடத்திச்செல்லப்பட்டு நேற்றுமுன்தினமிரவு சுட்டுக் கொலைசெய்யப்பட்டிருக்கலாம் என்று பொலீஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

கடந்த வியாழக்கிழமை கட்டுநாயக்க பகுதியில் இனந்தெரியாத ஆயுதக் குழுவொன்றினால் கடத்திச் செல்லப்பட்ட மட்டக்களப்பைச் சேர்ந்த இரண்டு தமிழ் இளைஞர்களின் சடலங்களாக அவை இருக்குமா என்பது பற்றி

(14ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழ்த் தேசிய எழுச்சிக்கு விளையாட்டின் மூலம் எமது மெய்வல்லுநர்கள் சிறப்பான பங்களிப்பு!

## விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாராட்டு

கிளிநொச்சி,ஓக.29

தமிழருடைய தேசிய எழுச்சியில் விளையாட்டின் மூலம் காத்திரமான பங்களிப்பை ஏற்படுத்த முடியும் என்பதை தமிழர் தாயக மெய்வல்லுநர்கள் நிரூபித்துள்ளனர்.

தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மாத்தளையில் நடைபெறும் தேசிய தடகளப் போட்டியில் இம்முறை தமிழர் தாயகத்தைச் சேர்ந்த வீர,வீராங்கனைகள் வெற்றியீட்டியதைப் பாராட்டி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இப்போட்டிகளில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பிரதீப்குமார் குண்டெறிதலிலும் கமலமோகன் உயரம் பாய்தலிலும் தங்கப் பதக்கம் பெற்றுள்ளனர். இது யாழ். மாவட்ட மெய்வன்மைத் துறையில் நீண்டகாலத்தின் பின் இடம்பெற்ற சாதனையாகும். இதே போன்று முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த நிறஞ்சன் 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த ரதீசன் நீளம் பாய்தலில் வெண்கலப் பதக்கத்தையும் வென்றுள்ளனர். வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த சந்திராணி பெண்களுக்கான 5ஆயிரம் மீற்றர் மற்றும் 10 ஆயிரம் மீற்றர் ஓட்டங்களில் முறையே வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுள்ளார். ஆண்களுக்கான 4X400 மீற்றர் ஓட்டப் போட்டியில் வடக்கு - கிழக்கு அணி மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாண உதைபந்தாட்ட அணியும் கபடி அணியும் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளன.

இந்த வெற்றிகளின் அடித்தளத்தில் பயிற்றுநர்களின் உழைப்பும் வடக்கு, கிழக்கு மெய்வல்லுநர் சங்கத்தின் உருவாக்கமும் உள்ளது. இனரீதியான ஒடுக்குமுறை மற்றும் பாரபட்சம் என்பனவற்றுக்கு எதிராக எமது வீர, வீராங்கனைகள் சமாதானச் சூழ்நிலையிலும் போராடவேண்டியுள்ளது. - என்று அறிக்கையில் விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (ஒ)

## மர்மப் பொருள் வெடித்ததில் காயம்!

தென்மராட்சி,ஓக.29

குப்பையை எரித்தபோது மர்மப் பொருள் வெடித்ததில் இளைஞர் காலில் காயமடைந்தார். கடந்த வெள்ளியன்று மாலை வேம்பிராயில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

மந்துவில் கிழக்கைச் சேர்ந்த குலசேகரம் மயூரன் (வயது 17)என்பவரே இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவராவார். (எ-117)

## விபத்தில் மரணம்!

வடமராட்சி,ஓக.29

புலோலி மேற்கு மாயக்கையில் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். வியாபாரிமூலை, வீரபத்திரர் கோயிலடியைச் சேர்ந்த தங்கராசா குணசீலன் (வயது 30) என்பவரே இந்த விபத்தில் உயிரிழந்தவராவார்.

இவர் செலுத்திவந்த மோட்டார்சைக்கிள் வீதியோர மரத்துடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-12-173)

## சிறுவர் உரிமை தொடர்பான பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,ஓக.29

மாவட்டச் சிறுவர் பாதுகாப்புக்குழு நடத்தும் சிறுவர் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுப் பயிற்சிப் பட்டறை நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.ஜும் ஆ பள்ளிவாசல் ஒழுங்கையில் உள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் நடைபெற உள்ளது. (ஒ-204)

# காரைநகரில் இன்றும் நாளையும் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

ஊர்காவற்றுறை,ஓக.29

காரைநகர் பகுதியில் இன்றும் நாளையும் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றும் பணி நடைபெறவுள்ளது.

இன்று திங்கட்கிழமை காலை 9.00 - 10.30 மணிவரை நீலன்காடு முன்பள்ளி நிலையத்திலும், 11.00 - 12.30 மணிவரை காரைநகர் வேம்படிச் சந்தியிலும்,பிற்பகல் 1.00-2.00 மணி வரை காரை.மத்தி கங்கைமதி சனசமூக நிலையத்திலும் பி.ப. 2.15 - 3.30 மணிவரை மருதடி முன்பள்ளி நிலையத்திலும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.00-10.30 மணிவரை தோப்புக்காடு குடியேற்றத்திட்ட கடையடியிலும்,11.00-12.30 மணி வரை களபூமி முருகமூர்த்தி கோயிலடி முன்பள்ளி நிலையத்திலும் பிற்பகல்1.00-2.00 மணிவரை ஊரிமுன்பள்ளி நிலையத்திலும், பிற்பகல் 2.15-3.30 மணிவரை பிட்டியெல்லை முன்பள்ளி நிலையத்திலும் தடுப்பூசி ஏற்றப்படும்.

இத்தினங்களில் பொதுமக்கள் தவறாது தமக்கு அண்மையிலுள்ள நிலையங்களில் தமது வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்புமருந்தேற்றிக் கொள்ளுமாறு ஊர்காவற்றுறை பிரதேச சபையின் செயலாளர் ஏ.கணேசானந்தராஜா தெரிவித்தார். (ஒ-16)

## திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஓக.29

வலி.கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் அலுவலகம் மற்றும் தீவன விற்பனை நிலையத்தின் திறப்புவிழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் க.சிவதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-204)

## சமய சந்நிதிகளில்

வேலணை, மண்கும்பான் வெள்ளைப் புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய மகாகும்பாபிசேகத்தை முன்னிட்டு நாளை செவ்வாய்க்கிழமை காலை 8மேணி முதல் மாலை 5 மணி வரை எண்ணெய்க்காப்புச் சாத்துதல் இடம்பெறும். (ஒ-211)

* * *

யாழ்ப்பாணம் ,ஓக.29

சித்தங்கேணி கற்பகப்பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுதினம் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (3-204)

# ஜனாதிபதித் தேர்தல் குறித்து ரணில்-தொண்டா நீண்டபேச்சு

கொழும்பு, ஓக.29

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இ.தொ.காவின் ஆதரவைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக அக்கட்சித் தலைவர் ஆறுமுகன் தொண்டமானுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க முக்கிய பேச்சுகளை நடத்தியிருக்கிறார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்றுமுன்தினம் சுமார் இரண்டு மணிநேரம் இந்தப் பேச்சு நடைபெற்றது. இந்தச் சந்திப்பின்போது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமக்கு ஒத்துழைப்பை வழங்குமாறு தொண்டமானிடம் ஐ.தே.க. தலைவர் நேரடியாகக் கோரிக்கை விடுத்தார்.- எனத் தெரியவருகிறது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக நேற்று 'உதயனு'க்கு கருத்துத் தெரிவித்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான், வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கான தீர்வு, பொதுக்கட்டமைப்பின் அமுலாக்கம், பெருந்தோட்ட மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கான தீர்வு என்பன குறித்து ஐ.தே.க. தலைவருடன் நீண்டநேரம் தாம் கலந்துரையாடினார் எனக் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவை வழங்குவது என்பது பற்றித் தமது கட்சி இன்னமும் தீர்மானிக்கவில்லையென்றும், இது தொடர்பான தீர்மானம் விரைவில் எடுக்கப்படுமென்றும் ஆறுமுகன் தொண்டமான் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆதரவைக் கோரி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு நெருக்கமான சிலரும் இ.தொ.கா. தலைவருடன் பேச்சுகளை நடத்தியுள்ளனர். (க)

# தமிழர்களை இம்சைப்படுத்தும் அவசரகாலச் சட்டத்தை நீக்குக

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரேரணை

கொழும்பு,ஓக.29

அவசரகால நிலைமை தமிழ் மக்களுக்கு எதிராக ஒழுங்குமுறையாக செயல்படுத்தப்படுவது இப்பொழுது வெளிப்படையாகியுள்ளது.

இந்த அபாயகரமான நிலைமையால் மனித உரிமை மீறல்கள் ஏராளமாக இடம்பெற்றுவருகின்றன. இவை தாமதமின்றி உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படவேண்டும் அதற்கு அவசரகாலநிலை உடனடியாக வாபஸ் பெறப்படுவது அவசியமாகும்.

அவசரகால நிலைமையை வாபஸ்பெற வேண்டும் என்று வற்புறுத்தி நாடாளுமன்றத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கடந்த வாரம் முன்வைத்த ஒத்திவைப்புப் பிரேரணையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஒத்திவைப்பு பிரேரணையை முன்மொழிந்து பேசியபோது கூறியதாவது:-

ஓகஸ்ட் 19ஆம் திகதி தமிழ் பத்திரிகையாளரும் வீரகேசரிப் பத்திரிகையின் மல்வத்தகம செய்தியாளருமான சுப்பிரமணியம் ரமேஷ் பொலீஸாரால் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் பற்றிய தகவல்களையோ எதற்காகக் கைது செய்யப்பட்டார் என்பதையோ குருநாகல் பொலீஸார் வெளியிட மறுத்துள்ளார்கள்.

ஓகஸ்ட் 20ஆம் திகதி வெள்ளவத்தையிலுள்ள 'சுடர் ஒளி' பணிமனை குண்டுத் தாக்குதலுக்குள்ளாகியுள்ளது.

ஓகஸ்ட் 23ஆம் திகதி அப்பத்திரிகையின் செய்தியாளர் ஜே.வி.பியினரின் ஆர்ப்பாட்டமொன்றை பார்த்துச் செய்தி சேகரிக்கச் சென்றபொழுது அக்கட்சியின் ஆட்களால் நையப்புடைக்கப்பட்டுள்ளார். அது மட்டுமன்றி அவர் பொலீஸாரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு ஓகஸ்ட் 13ஆம் திகதி அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டதிலிருந்து நூற்றுக்கணக்கான தமிழ்ப்பொதுமக்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள வடக்குக் கிழக்குப் பகுதிகளில் மட்டுமன்றி தென்னிலங்கையிலும் சுற்றிவளைப்புகள் மூலம் நூற்றுக்கணக்கானவர்கள் கைதுசெய்யப்பட்டு இம்சைக்குள்ளாக்கப்படுகின்றனர்.

- இவ்வாறு கஜேந்திரகுமார் எம்.பி. கூறினார். (ப)

# பதிவுசெய்யப்படாத சிறுவர் இல்லங்களை மூடுவதற்கு ஏற்பாடு செய்யுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஓக.29

யாழ். மாவட்டத்தில் முறைப்படி பதிவு செய்யாது இயங்கும் சிறுவர் இல்லங்களை மூட சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் அறிவுறுத்தியுள்ளார்.

மாவட்டத்தில் 56 சிறுவர் இல்லங்கள் இயங்கிவருகின்றன. இந்தச் சிறுவர் இல்ல நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் ஒன்று மேலதிக நீதிவான் தலைமையில் யாழ்.நீதிமன்ற கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் நீதிவானுடன், வடக்கு - கிழக்கு மாகாண நன்நடத்தைத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி ரஞ்சினி நடேசபிள்ளை, இல்ல நிர்வாகிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

சிறுவர் இல்லங்கள் தொடர்பான பல்வேறு விடயங்கள் இதில் கலந்துரையாடப்பட்டன.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட் சிறுவர்களுக்கென இனி சிறுவர் இல்லங்கள் அமைக்கமுடியாது.

நன்நடத்தைத் திணைக்களத்திலும் சுகாதாரத் திணைக்களத்திலும் சிறுவர் இல்லங்கள் பதிவுசெய்யப்படவேண்டும். இவ்வாறு பதிவுசெய்யப்படாத 3 இல்லங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அவற்றை மூட உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இல்லத்தில் உள்ள சிறுவர்கள் பெற்றோருடன் வளரவேண்டும். இதனால், இல்லங்களில் வளரும் சிறார்களைப் பெற்றோருடன் வளர வகைசெய்யப்படும். இதன்மூலம் அடுத்துவரும் 10 ஆண்டுகளில் சிறுவர் இல்லங்கள் தேவையற்ற ஒன்றாக அமைந்து விடும்.

தற்போதுள்ள சிறுவர் இல்லச் சிறார்களுக்குத் தொழில்சார் கல்விகளை கற்பிக்க வேண்டும். இதன்மூலம் அவர்கள் எதிர்காலத்தில் சுய பொருளாதாரத்தில் நிற்க வழி செய்யலாம் என்று நீதிவான் தெரிவித்தார். (எ-204)


மார்க்கோணியின் மின்சாதன பாதுகாப்புக் கைகேடு

120 வீட்டு மின்சாதனங்கள்
மின் உதவிச்சாதனங்கள்
மின்விரய குறிப்புகள்
மின் அருஞ்சொற்கள்
வீட்டு மின்னியல்
மின்தாக்க முதலுதவி
பாவனையாளருக்குரிய
மின் அலகுகள்,குறியீடுகள்

நேரடி விலை 230/=

இலங்கையில் முதல் முதலாக ஓர் புதிய பரிமாணத்தில் அனைவர் வீட்டிலும் இருக்கவேண்டிய பாவனையாளருக்குரிய மின்சாதன பாதுகாப்புக் கையேடு ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனை புத்தகக் கடைகளில் பெறலாம். கடைகளில் பெறமுடியாதவர்கள், இதனை உறுதியான பதிவுப்பார்சல் மூலம் விரைவாகப் பெறுவதற்கு 260 ரூபா மணிஓடரை பதிவுத்தபால் மூலம் எமது முகவரிக்கு அனுப்பவேண்டும்.

அனுப்பவேண்டிய தபாற்கந்தோர் :- Wellawatta.
பெறுபவரின் பெயர்:-Manager, Marconi Technical Institute.

MARCONI TECHNICAL INSTITUTE
410, 2nd Floor, Galle Rd, Wellawatta. TP - 0112 361362





# 'சுடர் ஒளி' பத்திரிகையாளர் தாக்கப்பட்டமை மனிதத்துவம் இல்லாத செயல் ஆகும்

## உழைக்கும் பத்திரிகையாளர் கண்டனம்

கொழும்பு,ஓக.29

'சுடர் ஒளி' பத்திரிகையாளர் செய்தி சேகரிக்கச் சென்றவேளையில் தாக்கப்பட்டு அவரது ஊடக உபகரணங்கள் சேதப்படுத்தப்பட்டிருப்பதை சிறிலங்கா உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் கடுமையாகக் கண்டித்திருப்பதுடன் குறிப்பிட்ட செயல் மனிதத்துவமற்றது என்றும் வர்ணித்துள்ளது.

அடிப்படை ஜனநாயகப் பண்புகளை மதிக்கும் எந்தவொருவரும் இம்மாதிரி மிருகத்தனமான நடவடிக்கையை நியாயப்படுத்துவார்கள் என்று நாம் கருதவில்லை. ஜனநாயகக் கொள்கைகள் மீதும் ஊடகத்துறை மீதும் நடத்தப்பட்டுள்ள தாக்குதல்களின் வரிசையில் இதுவும் ஒன்று. 'சுடர் ஒளி' நிருபரை ஒரு சந்தேகத்துக்குரிய நபர் என்பதுபோல் காட்டி சம்பவத்தை சில தரப்பினர் நியாயப்படுத்த முயல்வதையும் நாம் கண்டிக்கிறோம் என்று அவ்வுழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

சந்தேகத்துக்குரியவர் என்று கருதப்படும் ஒரு நபரை இவ்வாறுதான் நடத்துவதா என்று நாம் கேட்கவிரும்புகின்றோம். சம்பவத்தில் தொடர்புடையவர்கள் பற்றி விசாரணைகளை அதிகாரிகள் இன்னமும் முடிக்கவில்லை. இம்மாதிரியான பலவீனங்களே குறிப்பிட்டது போன்ற செயற்பாடுகளை ஊக்குவிக்கின்றன. விசாரணகளை விரைவுபடுத்தி சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கைகளை எடுக்குமாறு சங்கம் கேட்டுக்கொள்கின்றது. (ப)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# தீர்க்கமாகச் சிந்திக்கவேண்டியவேளை

ஜனாதிபதித் தேர்தல் குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பு அநேகமாக இன்று வெளியிடப்படும். அதன் பின்னர் தென்னிலங்கையில் தேர்தல் சூடு பரவத்தொடங்கிவிடும். எதிர்வரும் மூன்று மாதங்களுக்குத் தேர்தலிலேயே தெற்கின் பொழுது கழியும். வாக்கு வங்கியைப் பெருக்கி தேர்தலில் வெற்றிபெறுவதற்கான நல்ல வழிகள் எவை, கள்ள வழிகள் எவை என்று கணக்குப் போட்டுப் பார்த்து, அவற்றுக்குச் செயல்வடிவம் கொடுப்பதே அரசியல் தலைவர்களின் - கட்சிகளின் - ஓயா வேலையாக இருக்கும்.

தெற்கின் மக்களும் அரசியல் ரீதியாகக் கன்னை பிரிந்து, தாம் தாம் சார்ந்த கட்சிக்கு ஆதரவாக வாக்குத் திரட்டுவதிலும், அதற்காகத் தங்களுக்குள்ளேயே முட்டிமோதிக்கொள்வதிலும் காலத்தைப் போக்குவர்.

போர்நிறுத்தச் சூழ்நிலை கலைந்து போகும் அபாயம் குறித்தோ இனப்பிரச்சினைத் தீர்வு இழுபட்டுப்போவது குறித்தோ அவர்கள் கவலைப்படமாட்டார்கள்; அக்கறையும் கொள்ளமாட்டார்கள். விடுதலைப் புலிகள் போர்நிறுத்தத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு யுத்தத்தை மீண்டும் தொடங்கினால் அன்றி, தெற்கின் அரசியல் தலைவர்கள்கூட ஜனாதிபதித் தேர்தல் மயக்கத்திலிருந்து விழித்துக்கொள்ளமாட்டார்கள்.

மறுபுறத்தில், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் அதீத ஆர்வம் கொள்வதற்கு எந்தக் காரணியும் இல்லை. ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக, தெற்கின் ஆட்சிகள் மாறின; அதிகாரம் வெவ்வேறு தலைவர்களின் கைகளுக்குச்சென்றுசேர்ந்தது. தங்கள் பிரச்சினைகளுக்கு முடிவுகாணக்கூடியவர்கள் என்று அடையாளம் கண்டு தெற்கின் பல தலைவர்களையும் அரசியல் கட்சிகளையும் நம்பி மோசம்போன நிலையே தமிழர் வாழ்வில் தொடர்ந்து நீடிக்கிறது.

''தாம் வென்றால் - ஆட்சிக்கு வந்தால் - அதனைச் செய்வோம் இதனைச் செய்வோம்'' என்று தெற்குத் தலைவர்கள் கூறியதை நம்பி, அவர்களை ஆதரித்து மோசம்போனவர்கள் தமிழ் மக்கள்.

நாட்டின் மிகப் பிரதான பிரச்சினையாக விளங்கும் இனப் பிரச்சினை குறித்துத் தேர்தல் காலங்களில் அளித்த வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்ட - காலத்தைப் போக்கித் தமது காரியத்தை நிறைவேற்றிக் கொண்ட - தெற்குத் தலைவர்கள் குறித்துத் தமிழ் மக்கள் சலிப்படைந்துவிட்டார்கள்.

இனப்பிரச்சினை ஆயினும் சரி, அதிலிருந்து உற்பவித்த போரானாலும் சரி அவற்றைத் தீர்ப்பதாக சிங்களத் தலைவர்கள் வாக்குறுதிகள் தந்தார்கள். தீர்வுகாண்பதற்கு முயற்சிகள் எடுப்பதாகக் காட்டிக்கொண்டார்கள். ஆனால், திரைமறைவில் தங்கள் முயற்சிக்குத் தாங்களே பொறிவைத்து வீழ்த்துவார்கள். நாங்கள் சூழ்நிலையின் அடிமைகளாகிவிட்டோம், கொஞ்சம் பொறுங்கள்; எப்படியும் நாம் தளரமாட்டோம் என்றெல்லாம் கரிசனை ஒழுகக் கூறுவார்கள். அவ்வளவுதான், சம்பந்தப்பட்ட தலைவரின் ஆட்சிக் காலம் முடிந்துவிடும். அடுத்தவர் வருவார். அவரும் அதேவழி, அதேபாணி, அதே தந்திரம், அதே ஏமாற்று என்று காலம் கடந்து செல்லும் - சென்றது.

இவையே தெற்கின் அரசியல் தலைவர்களினதும், அரசியலினதும் மாற்றமுடியாத தொடர்கதையாக, தமிழர்களைப் பொறுத்தவரையில் பெரிய பருத்த சாபக்கேடாகத் தொடர்கிறது. இத்தனைக்கும் காரணம் என்ன? தமிழ் மக்களின் பிரச்சினையைத் தெற்குத் தலைவர்கள் தீர்த்துவைக்கவேண்டும் என்ற தங்கு நிலைதான்.

தமிழர்களுக்குரிய உரிமைகளை வழங்கக்கூடாது. அவர்களை நாட்டின் சம பிரஜைகளாக அன்றி, இரண்டாம் தரப் பிரஜைகளாவே வைத்திருக்கவேண்டும் என்ற பேரினவாதப் போக்கு எப்போதுமே தெற்கில் மாறப்போவதில்லை; மாறும் என்று நம்புவதற்கும் இல்லை.

எனவே, தெற்கின் ஆட்சி மாற்றங்களால், ஆட்சி மாற்றங்களைக்கொண்டுவரும் தேர்தல்களால் தமிழர்களுக்கு எதுவும் கைக்கு வந்துசேரப்போவதில்லை. இது வெறும் ஊகமல்ல; கடந்த ஐம்பது வருட கால அரசியல் அனுபவம்; தமிழர்களுக்குக் கிடைத்த படிப்பினை.

தமிழ் மக்களின் வாக்குகளை வாங்கினால் தேர்தலில் வெல்லும் வாய்ப்பு அதிகம். அதனால் தெற்கின் அரசியல் தலைவர்கள் தேர்தல் காலங்களில் கவர்ச்சியான வாக்குறுதிகளை அள்ளி வீசுவார்கள். அவற்றைக் கேட்டு, ஆதரித்து, ஏமாந்து போன அனுபவம் நிறையவே தமிழ் மக்களுக்கு உண்டு. எனினும், ஏமாற்றப்பட்டுப் பின்னர் தலைவிரி கோலமாக நிற்பதே எங்கள் வழக்கமாகிவிட்டது.

இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வுகாண்பதற்கு விருப்பம் உள்ளதாகவும், ஆட்சி அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதற்கான சமஷ்டிமுறை உகந்தது என்றும் தெற்கின் அரசியல் தலைவர்கள் அண்மைக்காலமாக அடிக்கடி கூறிவருகிறார்கள். ஆனால், அவ்வகைத் தீர்வு நோக்கி ஓர் அங்குலம் கூட இதுவரை நகரவில்லை. 'பேச்சுப் பல்லக்குத் தம்பி கால்நடை' என்ற போக்கிலேயே எல்லாம் நடைபெறுகின்றன.

இத்தகைய ஒரு நச்சுச் சூழலில் சிக்கியுள்ள தமிழ் மக்கள் தமது அரசியல் வழமையை மாற்றிக்கொள்ள வேண்டிய தேவை, முன்னர் எப்போதும் இல்லாதவாறு இப்போது அதிகமாகியுள்ளது.

சிங்களம் எங்கள் பிரச்சினையைத் தீர்க்கப்போவதில்லை- ஒருபோதும் தீர்க்கவும் மாட்டாது - அதற்கான உண்மையான நாட்டமும் இல்லை. காலத்துக்குக் காலம் - தேர்தலுக்குத் தேர்தல் - அதன் தலைமைகள் அவ்வாறு காட்டிக்கொண்டாலும் தமிழர்களைப் பலவீனப்படுத்தி உள்ளவற்றையும் இல்லாமல் ஆக்கி அவர்களைத் தங்களுக்குக் கீழாக வைத்திருப்பதே உள்ளார்ந்த குறிக்கோள் - நோக்கம்.

ஆகையால், தமிழர்கள் தங்கள் தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கத் திடசங்கற்பம் பூணவேண்டும். வெறும் வாய் வேதாந்தமாக அல்லாமல், தமிழர் ஒவ்வொருவரின் இலக்கும் இலட்சியமும் அதுவாகவே அமையவேண்டும். நிகழப்போகும் ஜனாதிபதித் தேர்தல் காலத்தோடு அந்த இலக்கு நோக்கிய பயணம் ஆரம்பமாகவேண்டும். இல்லையேல், நாமும் எமது சந்ததிகளும் சிங்கள - பௌத்த பேரினவாதத்துக்குள் அமிழ்த்தப்பட்டு விடுவோம். இதுகுறித்து ஒவ்வொரு தமிழனும் தீர்க்கமாகச் சிந்திக்கவும் செயற்படவும் மனங்கொள்வது இன்றியமையாததாகும்.

# 'பொன்னகவை' மலர் தமிழரின் வரலாற்றுப் பொக்கிசம் வெளியீட்டு விழாவில் பாலகுமாரன் தெரிவிப்பு



கிளிநொச்சி,ஓக.29

பொன்னகவை மலர் தமிழரின் வரலாற்றுப் பொக்கிசம்.

- இவ்வாறு தெரிவித்தார் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன்.

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற லெப். கேணல் ராஜனின் பதின்மூன்றாம் ஆண்டு நினைவு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

மாவீரர் லெப்.கேணல் ராஜனின் வீரம் செறிந்த வரலாறு விடுதலைப் போராட்டத்திற்கு வலுச்சேர்த்துள்ளது. அந்த மாவீரரின் நினைவு நாளில் தேசியத் தலைவர் பற்றிய இந்தப் பொன்னகவை நூல் வெளியிடப்படுவது பொருத்தமானதாகும்.

அண்மையில் தமிழீழத் தேசியத் தலைவரை விடுதலைத் தீப்பொறிக்காக நாம் செவ்வி கண்டபோது நான் நீண்ட காலமாகத் தயார்படுத்திய கேள்வியைக் கேட்டேன்.

''நீண்ட காலமாக நெருக்கடிகளுக்கு எப்படி முகம் கொடுக்கிறீர்கள். இதற்கான ஆற்றல்களை எங்கிருந்து பெற்றுக் கொண்டீர்கள்'' எனக்கேட்டேன்.

''வரலாற்றுப் பட்டறிவில் இருந்து பெற்றுக் கொண்ட பாடங்கள்தான் என்னை இவ்வாறான நிலைக்கு உருவாக்கியது'' என பதில் அளித்தார்.

எங்கள் கேள்விகளுக்கு எல்லாம் பதில் அளிக்கும் வகையில்தான் பொன்னகவை மலர் வெளிவந்துள்ளது.

நல்ல எண்ணங்கள் தேவை. நல்ல எண்ணங்கள்தான் செயலாக மாறும். நல்ல செயல்கள்தான் பழக்கங்களாக மாறும். நல்ல பழக்கங்கள்தான் குணங்களாக மாறும். நல்ல குணங்கள்தான் வாழ்க்கையைத் தீர்மானிக்கும்.

நல்ல எண்ணங்கள், பட்டறிவு எப்படிப் பெற்றுக்கொள்வதென்பதை இந்த நூல் தெளிவாக விளக்கியுள்ளது - என்றார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய புலிகளின் குரல் பொறுப்பாளர் நா.தமிழன்பன் தெரிவிக்கையில்:-

மாவீரர் லெப்.கேணல் ராஜன் இந்தியப் படையினருக்கு எதிராகப் பல தாக்குதல்களை வெற்றிகரமாக நடத்தியவர். போராளிகளுடன் அன்பாகப் பழகுவதுடன் களமுனைகளிலும் போராளிகளை நன்றாக வழிநடத்தியவர்- என்றார்.

லெப்.கேணல் ராஜன் கல்விப் பிரிவுப் பொறுப்பாளர் கீதன் தமது தலைமையுரையில்:-

எமது அமைப்பின் மூத்த உறுப்பினரும், புலனாய்வுத்துறைப் பொறுப்பாளருமாகிய ச.பொட்டுஅம்மான் மாவீரர் லெப்.கேணல் ராஜன் தொடர்பாக எழுதியகட்டுரையினைப் படித்ததனூடாகப் பல செய்திகள் எமக்குத் தெரிந்தன. ராஜனின் தேச உணர்வு, இலட்சிய உணர்வு, வீர உணர்வு, தலைமை மீதான பற்று, போராளிகளை வளர்தெடுக்கின்ற பாங்கு இப்படியான பல பக்கங்களை ராஜனின் வரலாற்றிலிருந்து கற்றுக்கொண்டோம். அவரின் பெயர்தாங்கி பணியாற்றும் இப்பிரிவு அவரின் இலட்சியங்களுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் தன் பணியில் முனைப்புடன் செயற்படும் - என்றார்.

மாலை நான்கு மணியளவில் ஆரம்பித்த இந்நிகழ்வில் முதன்மைச் சுடரினை தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியினை மணலாறு கட்டளைத் தளபதி கேணல் ஜெயம் ஏற்றிவைத்தார். லெப்.கேணல் ராஜனின் உருவப் படத்திற்கு வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் சுடரேற்றி மலர் மாலை அணிவித்தார். அரங்க நிகழ்வுகள் லெப்.கேணல் ராஜன் கல்விப் பிரிவுப் பொறுப்பாளர் கீதன் தலைமையில் இடம்பெற்றன.

மாவீரர் வணக்க நடனத்தைத் தொடர்ந்து லெப்.கேணல் ராஜன் பற்றிய நினைவுரையினைப் புலிகளின் குரல் பொறுப்பாளர் நா.தமிழன்பன் நிகழ்த்தினார்.

தமிழீழத் தேசியத் தலைவரின் 50 ஆவது அகவையினை ஒட்டி தேசியத் தலைவர் பற்றிய போராளிகளின் ஆக்கங்களைத் தாங்கி உருவான பொன்னகவை மலரினைக் கடற்புலிப் போராளி குமரதேவன் வெளியிட்டுவைக்க, வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் பெற்றுக்கொண்டார்.

பொன்னகவை மலர் பற்றிய அறிமுக வுரையினைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் நிகழ்த்தினார்.

போராளிகள் மத்தியில் நடத்தப்பட்ட கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களைத் தமிழீழ நிதிப் பிரிவுப் பொறுப்பாளர் திருக்குமரன், கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான கலைக்கொடி, தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், கேணல் ஜெயம், கேணல் தீபன், மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் ரேகா ஆகியோர் வழங்கினர்.

(எ)

# ஆசிரியர்களின் பதவி உயர்வு, சம்பள மறுசீரமைப்பு: வலயக்கல்விப்பணிப்பாளர்கள் கடிதம் வழங்குவர்

## கல்வி அமைச்சு புதிய தீர்மானம் எடுத்தது

அச்சுவேலி,ஓக.29

திருத்தி அமைக்கப்பட்ட ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம், ஆசிரியர்களுக்கான பதவி உயர்வுகள் மற்றும் சம்பள மறுசீரமைப்பு தொடர்பான கடிதங்களை வழங்குவதற்கான அதிகாரம் வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பான தீர்மானத்தைக் கல்வி அமைச்சு எடுத்திருப்பதாகக் கல்வி அமைச்சின் ஆசிரிய நிர்வாகத்திற்குப் பொறுப்பான செயலாளர் எஸ்.எல்.குணவர்த்தனா தெரிவித்தார்.

திருத்தி அமைக்கப்பட்ட ஆசிரியர் சேவைப் பிரமாணக்குறிப்பின் பிரகாரம் ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வுகள், சம்பள உயர்வுகள் வழங்குவது தொடர்பாக ஆசிரியர் சங்கங்களுடன் கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள் சந்தித்துக் கலந்துரையாடினர்.

ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளுக்குமான இந்தச் சந்திப்பு கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் கடந்த வியாழனன்று நடைபெற்றது.

ஆசிரியர்களுக்கான பதவி உயர்வுகள், சேவை உள்ளீர்ப்புகள் சம்பளங்களை மறுசீரமைப்பது தொடர்பான கடிதங்களை வழங்குவதற்கான அதிகாரங்கள் மாகாணக்கல்வி அமைச்சிற்கும் மாகாண பொதுச்சேவைகள் ஆணைக் குழுவுக்கும் உரியதாக இருந்த போதிலும்-

19-05-2005 கல்வி அமைச்சு வெளியிட்ட புதிய ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் பிரகாரம் ஆசிரியர் சேவையில் உள்ள 90 வீதமான ஆசிரியர்களுக்குச் சேவை உள்ளீர்ப்பு, சம்பள மறுசீரமைப்புக் கடிதங்கள் இந்தவருடம் டிசெம்பர் மாதம் முடிவதற்கு முன்னர் வழங்குவதற்குக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

உரியகாலப்பகுதியில் ஆசிரியர்களின் பதவி உயர்வுகளை வழங்கி முடிப்பதற்கு வசதியாக வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு இந்த அதிகாரங்கள் வழங்கப்படவிருப்பதாக எஸ்.எல்.குணவர்த்தனா தெரிவித்தார்.

வலயக் கல்விப் பணிப்பாளர் வழங்கும் தற்காலிகக் கடிதங்களுடன் பதவி உயர்வுகள் வழங்கப்பட்ட போதிலும் உரிய விவரங்களை மாகாணக் கல்வி அமைச்சு மற்றும் பொதுச் சேவை ஆணைக்குழு உரியமுறையில் பரிசீலனை செய்து நிரந்தர நியமனக் கடிதங்களை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இநதச் சந்திப்பில் 44 ஆசிரியர் தொழிற்சங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (எ-11)

# நெடுந்தீவு பிரதான வீதியில் இடையிடையே வீதி விளக்குப் பொருத்த நிதி கிடைத்தது

நெடுந்தீவு பிரதான வீதியில் ஆங்காங்கே வீதி விளக்குகள் பொருத்தப் படவுள்ளன.

இதற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் ரூபா ஒரு லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை - நெடுந்தீவு யுவானியர் கோயில் வீதிக்கும் மின் இணைப்புகள் வழங்கப்படும். இந்த மின்சார விஸ்தரிப்பு வேலைகளுக்கென பன்முகப் படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின்கீழ் ரூபா ஒரு லட்சமும் மாகாண அபிவிருத்தி நன்கொடை நிதியிலிருந்து ரூபா 2 லட்சத்து 50 ஆயிரமும் வழங்கப்பட்டுள்ளதாகவும் -

நெடுந்தீவு கிழக்கு அந்தோனியார் கோயில் வீதிக்கான மின்சார விஸ்தரிப்புக்கு ரூபா 2 லட்சத்து 50 ஆயிரம் மாகாண அபிவிருத்தி நன்கொடை நிதியில் இருந்து வழங்கப்பட்டுள்ளதாகவும் - நெடுந்தீவு பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

(எ-111)

**உதாவாக்கு**

ஒரு மனிதனின் கெட்ட குணங்களை வெறுத்துவிடு; ஆனால், அந்த மனிதனை வெறுக்காதே..

-ஓர் அறிஞர்.

**நாளை**

ஆவணி 14
செவ்வாய்க்கிழமை
30.08.2005
திதி: ஏகாதசி
மாலை 05.17 வரை
நட்சத்திரம்: திருவாதிரை
காலை 07.42
ஏகாதசி விரதம்
சுபநேரம்: 10.35 - 12.05
ராகுகாலம்: 03.05 - 04.35
(யாவும் பழைய நேரப்படி)

# மிதிவெடிகளை அகற்றக்கோரி யாழ்.அரசஅதிபருக்கு மகஜர்

நாவற்குழி - கேரதீவு வீதியிலுள்ள ஆயினுப்பிட்டி ஏற்றத்தடியில் புகையிரதப் பாதையோரத்தில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அப்புறப்படுத்தக் கோரி யாழ்.அரச அதிபருக்கு மகஜர் அனுப்பப்பட்டுள்ளது.

அப்பகுதியில் அமைந்திருந்த படையினரின் காவலரண் அகற்றப்பட்டுள்ள போதிலும் மிதிவெடிகள் அப்புறப்படுத்தப்படவில்லை என்றும் -

அப்பகுதிக்குள் மேய்ச்சலுக்குச் செல்லும் கால்நடைகள் பல கால்களை இழந்துள்ளன என்றும்- மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், நாவற்றுகுழி வீடமைப்புத் திட்டத்தில் குடியிருப்பவர்கள் பற்றைக் காடாக உள்ள இப்பகுதியில் விறகு வெட்ட முனைவதாகவும்-

பொதுமக்களுக்கு அங்க இழப்பு ஏற்படாதிருக்க அப்பகுதியினை மிதிவெடி அபாய அறிவிப்புப் பலகை போடப்பட்டு அங்குள்ள மிதிவெடிகளை அகற்றுமாறும் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-117)

**செப்ரெம்பர் 01 இல்**
**உலகத் திசை எங்கும் எமது உணர்வுகள் ஓங்கி ஒலிக்கட்டும்.**

## கடைகளில் திடீர் சோதனை; காலாவதியான பொருள்கள் அழிப்பு

வலி. தென்மேற்கு,ஓக.29

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், கடந்த புதனன்று பண்டத்தரிப்பு, சில்லாலை, சாந்தை ஆகிய இடங்களிலுள்ள கடைகள், விற்பனை நிலையங்கள் ஆகியவற்றில் திடீர் பரிசோதனை மேற்கொண்டனர்.

விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பிஸ்கெற்றுகள், மென்பானங்கள், பால்மா வகைகள் உட்பட மற்றும் பொருள்களின் காலாவதியாகும் திகதிகள் இவர்களால் பரிசோதனை செய்யப்பட்டன.

சில்லாலையிலுள்ள கடை ஒன்றில் திகதி காலாவதியான கேக் பெட்டி விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டு அவ்விடத் திலேயே அழிக்கப்பட்டது.


பண்டத்தரிப்பு பொதுச் சுகாதார பரிசோதகர் என்.நிர்மலானந்தன், நவாலி பொது சுகாதாரப் பரிசோதகர் பு.யோகதீபன் ஆகியோரால் இப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

(எ-135)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள், ஒரு பிரிவில் 40 மாணவர்கள் வரை அனுமதி. 6 ஆவது பிரிவு ஆரம்பம் 05.09.2005. பிளாக் வீதி, சங்கானை. (39418)(39-17)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்
17 - 03 - 1939

கொடியவர்களின் அழிப்பில்
09 - 09 - 2004

**அமரர் அருணாசலம் முத்தையா**

பாசமிகு அப்பாவின் அன்பிழந்து
ஓர் ஆண்டா?
தேடுகின்றோம் இப்பவும்- உம் நிழலை
தேடி வைத்த ஐந்து செல்வங்களால்.....

புன்னாலைக்கட்டுவன் /வ,
ஈவினை. (39411) (39-17)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## முதலாவது பிறந்ததின வாழ்த்து




29 08 2005



**ஜெயகுமார் – வனஜா** தம்பதியின் செல்வப் புதல்வன் **ஜெ. விமல்ராஜ்**

தனது முதலாவது பிறந்த நாளை இன்று (29.08.2005) திங்கட்கிழமை சாவகச்சேரி. மட்டுவிலில் உள்ள தனது இல்லத்தில் மிக விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, ஐயா, ஜேர்மனியில் உள்ள பெரியமாமா கண்ணன், அம்மம்மா, அப்பம்மா, சித்தப்பா குடும்பம், பெரியப்பா குடும்பம், சித்திமார், சித்தப்பாமார், மாமாமார், மாமிமார், கனடாவில் உள்ள பத்மினி அக்கா குடும்பமும் மற்றும் உற்றார், உறவினர்கள் விமல்ராஜ் அவர்களை மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் அருளால் பல்கலையும் பெற்று நீடூழிகாலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

கரணவாய் தெற்கு.
கரவெட்டி. (39343) (54-

– ஐயா

## விஷமிகளின் செயலால் பஸ் கண்ணாடி சேதம்!

ஊர்காவற்றுறை ,ஓக.29

அனலைதீவில் பயணிகள் சேவையில் ஈடுபட்டு வரும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் மீது விஷமிகள் சிலர் கற்களால் வீசியதில் பஸ்ஸின் ஒரு பக்கக் கண்ணாடி ஒன்று பலத்த சேதமடைந்துள்ளது.

அண்மையில் பஸ்தரிப்பிடத்தில் பஸ் தரித்து நின்றவேளை இரவு நேரத்தில் விஷமிகள் சிலர் பஸ்மீது கற்களால் வீசியெறிந்துள்ளனர். எனினும்,கல் எறிந்தவர்களை அவ்வூர் இளைஞர்கள் சிலர் துரத்திச் சென்ற போதும் அவர்கள் தப்பியோடி விட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இதனைத் தொடர்ந்து மேற்படி பஸ் பாதுகாப்புக் கருதி அனலை தீவிலுள்ள கடற்படையினரின் முகாமில் நிறுத்தி வைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-16)

**HOTEL MANAGEMENT CONSULTANCY IN JAFFNA**

யாழ்ப்பாணத்தில் Hotel management Consultancy தேவையானவர்கள் தங்களுடைய சகல பிரச்சினைகளுக்கும் நாடவேண்டியவர் M.P.KANESALINGAM (AHCIMA Lond.) முன்னாள் இலங்கைக்கான கனேடியத் தூதுவர், உல்லாசப் பிரயாண சபைத் தலைவர் மற்றும் ஹோட்டல் சம்பந்தப்பட்ட வல்லுநர்களின் அனுசரணையுடன் இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபன முன்னாள் முகாமையாளரும் ஓமான் நாட்டுப் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரியாகக் கடமையாற்றியவரால் உங்கள் சகல பிரச்சினைகளும் தீர்க்கப்படும்.

யாழ். நகர எல்லைக்குள் 10 பரப்புத் தொடக்கம் 15 பரப்புக்குள் காணி வைத்திருப்பவர்கள் என்னுடன் தொடர்புகொள்ளவும். முன்னணி நிறுவனம் ஒன்றுடன் இணைந்து (HOTEL) ஒன்றைத் தொடங்குவதற்கு ஆவன செய்யப்படும்.

இத்துடன், உலக நாடுகளுடன். TENDER/INDENTING, SUPPLIERS AND BUYERS சம்பந்தமான ஆலோசனைகளும் தரப்படும்.

தொடர்பு: வாரநாள்களில் இரவு 7 மணிக்குப் பின் ஞாயிறு முழு நேரமும்.

M.P.KANESALINGAM,
AHCIMA (LOND),
UTHAYA THARAGAI,
THULAIL PILLAYAR KOVIL,
ALVAI.

Res.Tel.226-3758
E.Mail: Mpkanesa@Sltnet.lK

(39370)(39-17)

## பதினாறாம் ஆண்டின் விட்டகலா நினைவலைகள்

தாயின் மடியில்
29 - 05 - 1969



தாயக மண்ணில்
29 - 08 - 1989

**வீரவேங்கை லிங்கன்**

**(பாலசுப்பிரமணியம் சந்திரலிங்கன்)**

*எட்டாது நீ சென்று பதினாறு ஆண்டாகியதோ?*
*மொட்டாக மலர்ந்து பட்டாயோ பட்டென்று*
*ஆறுக்குள் ஒருவனாய் அவதரித்த அருந்தவமே!*
*என்று உனைக் காண்போமென எண்ணித் தவிக்கின்றோம்.*

செட்டித்தெரு,
பருத்தித்துறை.
(39416) (24-39-17)

உன் பிரிவால் வாடும்:
பெற்றோர், சகோதரிகள்,
மைத்துனர்கள், மருமக்கள்.

## எங்கள் குடும்பத்தின் இனிய தலைவரின் நினைவாக......

**எஸ்.கே.மனோகரரூபன்**

(நிர்வாக பங்காளர், மனோகரன்& வெற்றிவேல்)

07.07.1944 29.08.1997



*காணும் பொருள்களில்*
*சந்திக்கும் மனிதரில்*
*சூழ்ந்திருக்கும் இயற்கையில்*
*உம் இறுதி எண்ணங்களை*
*கடைசி வார்த்தைகளை*
*தேடி அலைகின்றோம்.*

49, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம். (39413) (39-17)

– குடும்பத்தினர்.

43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170,
0777846811

Dip. in AutoCAD
Dip. in Internet E-Mail

தொழில்நுட்பக் கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களுக்கான பயிற்சி நெறிகள் ஆரம்பம்
29.08.2005

## ஓர் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
09 - 12 - 1922

தமிழீழ மண்ணில்
29 - 08 - 2004

**அமரர் ஜேக்கப் துரைசப்பிள்ளை**

*(அழகையா மாஸ்ரர்)*

ஓராண்டு ஓடி மறைந்தாலும்
ஓராயிரம் நினைவுகள் நெஞ்சில்
ஓங்கி ஒலிக்க அதை மீட்டி
ஓசையின்றி அழுகின்றோம்.

*இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று(29.08.2005) காலை 6.30 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.*

*797, கடற்கரை வீதி,*
*பாஷையூர், யாழ்ப்பாணம்.*

மனைவி, மக்கள்,
மருமக்கள்.
*(39412) (39-17)*

## நெஞ்சிலிருந்து நீங்கா 5 ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 06 - 07 - 1930 விண்ணில் 24 - 08 - 2000



**அமரர் வல்லிபுரம் தியாகராஜா**

(ஓய்வுபெற்ற அதிபர்)

மண்ணில் 18 - 12 - 1977 விண்ணில் 04 - 03 - 2000



**அமரர் தியாகராஜா அன்பகிலன்**

(அன்பு)

இறுதிவரை என்னைக்காத்து
வழிகாட்டுவார் என்றிருந்தேன்
கணவர் காலன் கையில்
அகப்பட்டார்– கண்டேன் துடித்தேன்
பிள்ளையுடன் வானத்தில் சென்றார்.
அப்பாவும் பிள்ளையும் என்னை விட்டு
சென்றார்கள் எப்படித்தான் என்னை
விட்டுச் செல்ல மனம் வந்ததோ
அப்பாவும் பிள்ளையும் என்னை
அழைத்துச் செல்வார்கள் என்று
காத்திருக்கின்றேன்.
(மனைவி)

அன்பும் பண்பும் நிறைந்த
எங்கள் செல்லமகனே! 5 ஆண்டுகள்
சென்றதோ ஆறாத்துயரில் எந்நாளும்
உன் நினைவலைகளால்
என் உள்ளத்தில் அலைபோல்
வெந்து தவிக்கின்றேன்
நிலவு ஒளி மயமாக இருக்கும்.
நிலவு போனால் இருட்டு அதுபோல்
என்னிதயம் இனி என்று என்மகன்
எனை அணைப்பான் என்று காத்திருக்கிறது.
(தாய்)

ஆண்டுகள் ஐந்து சென்றாலும் உங்கள் நினைவாக இருக்கும்.

தி.ரதிலீலாவதி, "ரதிஇல்லம்" சாவகச்சேரி.
(வைத்தியசாலை முன்பாக). (39380)(51-)

மனைவி, தாய்.

# அரச சேவை கீழுழைப்புப் பட்டதாரிகளின் சம்பள அளவுத்திட்டத்தில் விரைவில் மாற்றம்

## திணைக்களங்களுக்குச் சுற்றறிக்கை

தென்மராட்சி,ஓக.29

அரச சேவைகளில் கடமையாற்றும் கீழுழைப்புப் பட்டதாரிகளின் சம்பள அளவுத் திட்டத்தினை மாற்றியமைக்க அரசு தீர்மானித்துள்ளது.

அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் டி.திஸாநாயக்காவினால் சம்பள மாற்றம் தொடர்பான சுற்றிக்கை (இல.20/94 (11) சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

1978ஜனவரி முதலாம் திகதிக்கும் 1980 டிசெம்பர் 31ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப் பகுதிக்குள் எழுதுநர் அதனோடிணைந்த சேவைகளுக்குச் சேர்க்கப்பட்டு அக்காலப் பகுதியிலோ அல்லது அதற்கு முன்னரோ பட்டம் பெற்று தற்போதைக்கு அதே பதவிகளில் சேவையாற்றுகின்ற கீழுழைப்புப் பட்டதாரிகளுக்கு, பட்டம் பெற்ற பின் அதே பதவியில் 15 வருட காலத்தைப் பூர்த்தி செய்தல் அல்லது 1994 ஜூன் முதலாம் திகதி ஆகிய இரண்டில் பின்னராக அமைகின்ற திகதியிலிருந்து பின்வரும் சம்பள அளவுத் திட்டங்களின் பேரில் சம்பளம் செலுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

✱ 1994ஜூன் முதலாம் திகதி தொடக்கம் ஏற்புடையதாகும் சம்பள அளவுத் திட்டம் அரச நிர்வாகச் சுற்றறிக்கை இல. 37/92 இன் பிரகாரம். ரூபா- 45120-10 X1200 - 57120.

✱ 1995 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் அ.நி.சு.இல.35/95மற்றும் (6/2000) பிரசாரம் ரூபா- 47640 -15 X1560 - 71040.

✱ 1997 ஜூலை முதலாம் திகதி தொடக்கம் அ.நி.சு.இல.2/97 (III) பிரசாரம் ரூபா 79380 - 16X 2460-118740

✱ 1999 ஜூன் முதலாம் திகதி தொடக்கம் அ.நி.சு.இல.2/97(III) பிரசாரம் ரூபா 90120-16X2460 -129480

✱ 2004 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் அ.நி.சு.இல. 15/2003 ரூபா105120-16 X 2460-144480

✱ 2004 டிசெம்பர் முதலாம் திகதி தொடக்கம் அ.நி.சு.இல.9/2004 ரூபா147180-16X3480 - 202860.

இச் சுற்றறிக்கையின் செயற்பாடுகளுக்காக 1978 ஜனவரி முதலாம் திகதி தொக்கம் 1980 டிசெம்பர் முப்பத்தொராம் திகதிவரையான காலப் பகுதிக்குள் எழுதுநர் அதனோடிணைந்த சேவைகளுக்கு ஆள்சேர்க்கப்பட்ட கீழுழைப்புச் சேவைப் பட்டதாரிகள் என்பதில் அக்காலத்திற்குள்ளோ அல்லது அதற்கு முன்னரே அப்பதவிகளுக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டு அக்காலத்திற்குள் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட பட்டதாரிகள் உள்ளடங்குவார்கள்.

இந்த அலுவலர்களுக்கு 2005 ஜூலை முதலாம் திகதிவரை அவர்கள் இற்றைவரை பெறப்பட்ட சம்பளத்தின் பேரில் செலுத்தியுள்ள மேலதிக நேரப் படிகள் விடுமுறை நாள் சம்பளங்கள் மற்றும் பிரயாணப்படிகளின் எதுவித நிலுவைத் தொகைகளையும் பெற உரித்தில்லை.

இந்த அலுவலர்களும் அடங்கலாக அரச சேவையின் எழுதுநர் அதனோடிணைந்த சேவைகளுக்கு 1980டிசெம்பர் 31ஆம் திகதி வரை சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள கீழுழைப்பு சேவைப் பட்டதாரிகளைக் குறித்த சேவைகளிலிருந்து அகற்றி மாற்றீட்டுத் தொழில்களில் ஈடுபடுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-117)

## நல்லூர் ஆலயச் சூழலில் இரத்தவங்கி இயங்கும்

யாழ்ப்பாணம்,ஓக.29

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்தவங்கி நல்லூர் ஆலயப் பகுதியில், பொதுமக்களிடம் இரத்த தானம் பெறும் வகையில் தற்காலிக இரத்தவங்கி ஒன்றை அமைந்துள்ளது.

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் ஆதரவில், அமைக்கப்பட்டு செயற்பட்டுவரும் இந்த வங்கியில் கடந்த இரு நாள்களில் 25 இற்கும் மேற்பட்ட பக்தர்கள் இரத்ததானம் வழங்கியுள்ளனர்.

எமது மக்களின் நலன் கருதி செயற்படும் இந்த வங்கிக்கு, ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்கள் மனம் விரும்பி வருகைதந்து இரத்த தானம் வழங்குமாறு இரத்த வங்கி அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார் (எ-15)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.29

நல்லூர் முருகன் ஆலய பெருந் திருவிழாக்காலத்தையொட்டி இளங்கலைஞர் மன்றம் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் 20 ஆம் நாளான இன்று திங்கட்கிழமை வி.கே.நடராசாவின் பாட்டுக்கச்சேரி நடைபெறும்.

வயலின் ஏ.ஜெயராமன், மிருதங்கம் என்.மாதவன், முகர்சிங் எஸ்.செந்தூரன் அணி செய்கலைஞர்களாகப் பங்கேற்பர். (எ-204)

# இலங்கை வரும் நோர்வேயினர்: கவனமாக இருக்க எச்சரிக்கை

ஒஸ்லோ, ஓக.29

இலங்கைக்கு விஜயம் செய்கையில் கவனமாக நடந்து கொள்ளும்படி நோர்வே தனது நாட்டு மக்களுக்கு அறிவித்துள்ளது.

இலங்கையில் தற்போதுள்ள நிலைமையில் அந்நாட்டுக்கு விஜயம் செய்யும் நோர்வே பிரஜைகள் அங்கு இருக்கும் காலத்தில் மிக விழிப்புடன் இருக்கவேண்டும் என்று நோர்வே வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அறிக்கைகளில் தெரிவித்துள்ளது.

இலங்கை அமைதிச் செயற்பாடுகளில் நோர்வே மிக முக்கிய பங்கு வகித்துவருகின்றது. இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் கேட்டுக்கொண்டதற்கமைவாகவே நோர்வே இந்த அமைதி முயற்சியில் அனுசரணையாளர்களாகச் செயற்பட்டுவருகின்றது. என்றாலும் அரசிலுள்ள சிலரும், சில எதிர்க் கட்சிகளும் நோர்வே அமைதி முயற்சிகளை எதிர்த்துவருகிறார்கள். (ப)



கண்காட்சியில் வைக்கப்பட்ட புகைப்படங்களைபட பார்வையிடுகிறார்கள்.

படம்: நேசன்

## நல்லூரில் புகைப்படக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஓக.29

நல்லூர் கந்தனின் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் புகைப்படப் பிரிவினரால் ஆலயச் சூழலில் கண்காட்சி ஒன்று நடத்தப்பட்டு வருகின்றது.

கடந்த கால துன்ப துயரங்களை வெளிப்படுத்தும் வகையில் இந்தப் புகைப்படக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான இக்கண்காட்சியில் ஈழத் தமிழர்கள் கடந்த காலங்களில் அனுபவித்த துன்ப துயரங்களையும், அதில் இருந்து மக்களை மீட்பதற்காக விடுதலைப் புலிகள் ஆற்றியசேவை மற்றும் அந்த அமைப்பின் வளர்ச்சிக் கட்டங்களைச் சித்திரிக்கும் புகைப்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

இக்கண்காட்சியைப் பெரும் எண்ணிகையானோர் பார்வையிட்டுச் செய்கின்றனர். (எ-ரி-86)




# நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்




## ஏந்திழாய் நடந்துவாடி



சங்கோசை கேட்குதடி - கிளியே
தாளமேள முழங்குதடி
எங்கெங்கும் வெளிச்சமடி - கிளியே
ஏந்திழாய் நடந்துவாடி

- *யோகர் சுவாமிகள்.*

## நல்லூர் என்றதுமே...

நல்லூர் என்றதுமே முருகா உன் திருநாமம்
எல்லோர் நெஞ்சிலுமே தேனாய் இனிக்குமையா - நல்லூர்

கல்லாதா ரானாலும் கற்றவர்க ளானாலும்
இல்லாதா திருப்போர் ஏதிலர்க ளானாலும் - நல்லூர்

கந்தனேநீ தஞ்சமெனக் களிப்புடனே நின்கோயில்
வந்தனைசெய் யுன்னடியார் வந்திடுவார் அதிகாலை
செந்துவர்வா யுமையாள்தான் பொய்கையிலே யுனையணைத்துச்
சிந்தைதனி லேமகிழ்ந்த சிவகுருவே முருகையா - நல்லூர்

நம்பிக்கை தொழுவார்க்கு நலந்தருவான் நல்லூரான்
நாமிருக்கப் பயமெதற்கென் றபயகரங்காட்டி நிற்பான்
தும்பிக்கை யண்ணனையே துணையாகக் கொண்டிடுவான்
தூயதமிழ்த் தெய்வமவன் நமக்கென்றுந் துணையாவான் - நல்லூர்

**நா.நல்லதம்பி**

## செல்வ முருகனைத் தேடு!

நல்லைப் பதிதனை நாடு - அங்கு
நல்லவை நடக்கு மெனப் பாடு!
செல்வ முருகனைத் தேடு - வினை
தீரு மென்றே தினம் ஆடு!
பால முருகனின் கீதம் - நாளும்
பக்தியை சேர்த்திடும் நாதம்!
கோல மயிலோனின் பாதம் - தினம்
பற்றினால் இன்பமே சேரும்!

அரியாலையூர் வே.ஐ.வரதராஜன்

## சுப்பிரமணியா சுகந்தா

அப்பனுக் குபதேசம் அருளிய வேலா
அகமெலாம் நிறைந்த அருளே

அத்திமுக வித்தகனின் இளவலே உந்தனது
அருட் திறன் வியந்து நின்றே

அன்பிலே தோய்ந்தென் ஆவியோடாக்கையும்
ஆனந்தமாக உருக

மூவுலகந்தனில் தேடரும் செல்வமே
மூச்சினில் இனித்திடும் முருகா

சூழ்வினை போக்கியே சுகமெலாம் நல்கிடும்
சிவசுதா உனதடி சரணம்

சுந்தரா சுகந்தா அனுதினம் எனையாள்
சுப்பிரமணியா சுகந்தா

**மணிமேகலை குமாரசாமி.**

## விந்தை செய்யும் என் வடிவேலன்

சிந்தை தெளிந்து எனை வந்தனை செய் என்பான்
விந்தை செய்யும் என் வடிவேலன்
அகந்தை ஒழிந்து எனை வந்து - அணை என்பான்
தன் - தையல்களோடு அருளும் என் வடிவேலன்
கந்தை கட்டினாலும் என் அடியாருள் ஒருவன் - நீ என்பான்
தந்தைக்கு உரைத்த என் வடிவேலன்
பந்தம் அறுத்திட்டு எந்தனை நாடிடு என்பான்
கந்தன் என் நல்லூர் வடிவேலன்

**தாவடியூர் லோ.சுரேன்**

## ஈழத்தமிழினத்தின் துயர் துடைப்பது எப்போது?

யாழகத்தார் நெஞ்சத்து நீக்கமற
நிறைந்த நல்லை நாதனே!
ஈழத்தார் ஏற்றிப் போற்றும்
தமிழ்ப் பெருந் தெய்வமே
ஆழத் தூர்ந்த நம் சமூக வேரறும்
துயர் துடைப்பதெப்போ ஆறுமுகா?
வேழமுகத்தான் தம்பியோ
நம்பினோம் அருளும் ஐயா

**வள்ளிநாயகி - சிவஞானசுந்தரம்**

சிவமயம்

# த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ் ஸ்தாபனத்தின்

வா பகுதி மொத்த வியாபாரிகள் நன்மை கருதி சீனாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட சீன கலர் பப்பிளின் மொத்தமாகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்**
44, 42, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(39342) T.P.:222 2985 (39-14-26)

# முதலாவது பிறந்த நாள் வாழ்த்துகள்

ஆர்க்லேன், உடுவிலைச் சேர்ந்த
**விஜயசிறி - பிருந்தா**
தம்பதியினரின் செல்வப் புதல்வன்
வி.றோகித் தனது முதலாவது பிறந்தநாளை
இன்று (29.08.2005) திங்கட்கிழமை
தனது இல்லத்தில் பெரும்
விமரிசையாகக்
கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, அத்தை ஜசோதா, மைத்துனர்கள், ஜெசிமிதா, தனுராஜ், வவுனியாவில் வசிக்கும் அன்ரி, பெரியமாமா குடும்பத்தினர், சின்னமாமா குடும்பத்தினர், அருண்மாமா குடும்பம், பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமா , சில்வேஸ் குடும்பத்தினர், சித்தப்பாமார், சித்திமார், அக்காமார், அண்ணாமார், உற்றார், உறவினர்கள் அனைவரும் வி.றோகித்தைப் பல்லாண்டு காலம் பரந்தன் குமரபுரம் ஸ்ரீமுருகன் அருள்பெற்று வாழவென வாழ்த்துகின்றனர்.

ஆர்க்லேன், உடுவில், சுன்னாகம்.
தகவல்: R. தேவரஞ்சன் குடும்பத்தினர்.

(39377)(26.14)




## சண்டிலிப்பாய் மாடுகளுக்குத் தடுப்பூசி

நவாலி,ஓக.29

சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பிரிவில் மாடுகளுக்கான தொண்டை அடைப்பான் நோய்த்தடுப்பூசி இன்றும், நாளையும் பின்வரும் இடங்களில் வைத்து ஏற்றப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், இன்று திங்கட்கிழமை காலை 8 மணி முதல் சுதுமலை குண்டடி வாசிகசாலை, சுதுமலை அம்மன் கோவிலடி ஈஞ்சடி வைரவர் கோவிலடியிலும் -

நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதி விநாயகர் சனசமூக நிலையம், உதய தாரகை சனசமூக நிலையம் ஆகிய இடங்களிலும் வைத்துத் தடுப்பூசி ஏற்றப்படும் என்று சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (எ-100)

## யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

**பதவி வெற்றிடம்:**

**எழுதுவினைஞர் (பெண்)**

கல்வித் தகைமைகள்: க.பொ.த. சாதாரணம் ஆறு பாடங்களில் சித்தி, சுருக்கெழுத்தில், தட்டெழுத்தில் தேர்ச்சி பெற்றவராய் இருத்தல் வேண்டும். வயது-30(முப்பது) மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

சம்பளம் பேசித்தீர்க்கப்படும்.

தகுதியுடையோர் 31.08.2005 புதன்கிழமை கல்வித் தகைமைகளுடனும் (சான்றிதழ்) மக்களின் நன்மதிப்பைப் பெற்ற இருவரின் நற்சான்றிதழுடனும் மு.ப.11 மணிக்கு சங்கக் காரியாலயத்திற்குச் சமுகம் கொடுக்கவும்.

**முகவரி:** யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்,
559, நாவலர் வீதி,
கயிலாய பிள்ளையார் கோயில் அருகில்,
யாழ்ப்பாணம்.

(சி-44836)(26-14)

## இரும்புக் கேற் வகை செய்வதற்கான கூறுவிலை கோரல்

1. இரும்பு சுருக்குக்கேற் (தகரமறைப்பாலானது)
2. சாதாரண இரும்புக்கேற்

மேற்படி கேற்வகை செய்வதற்கான கூறுவிலைகளைச் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் வேலை நாள்களில் இதற்கான விவரங்களை நேரில் பெற்றுக் கூறுவிலைகளைச் சமர்ப்பிக்கவும்.

**பொதுமுகாமையாளர்,**
வலி.கிழக்கு(வ.ப),
ப.நோ.கூ.சங்கம், அச்சுவேலி,
புத்தூர்.

(சி-44812)(26-14)

# மனமுவந்து வாழ்த்துகின்றோம்

மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளராகப் பதவி உயர்வுபெற்றுள்ள

உயர்திரு.
## துரைசிங்கம் ரகு



அவர்களை மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று நம்நாட்டிற்கும் மக்களுக்கும் பல சேவைகளைப் புரிய வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

**அஸ்விதா ரெக்ஸ்**
27, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

**நியூ ஜென்ஸ் கோணர்**
45, நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.
021 222 7659.

**றெஸ் கோணர்**
99, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

(26-14) (சி-44822)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளராக இருந்து தனது சிறந்த சேவையின் காரணமாகக் குறுகிய காலத்தில் மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளராக உயர்வு பெற்ற

உயர்திரு.
## துரைசிங்கம் ரகு



அவர்களை மேலும் பதவி உயர்வுகள் பெறவேண்டும் என வாழ்த்தி, மானிப்பாய் மருதடியானை வேண்டுகின்றோம்.

**மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம், மானிப்பாய்.**
தலைவர், பொதுமுகாமையாளர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

(சி-44830) (39-26-14)

# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



பண்ணாகம் நடராசா கதிர்காமத்தம்பி (தம்பி) ஆனைப்பந்தி உஷாந்தினி (உஷா) தம்பதியினரின் செல்வப் புதல்வி செல்வி ராகவி தனது முதலாவது பிறந்தநாளை (21-08-2005) ஞாயிற்றுக்கிழமை சுவிற்சர் லாந்தில் உள்ள தனது இல்லத்தில் மிகவும் குதூகலமாகக் கொண்டாடினார். செல்வி ராகவியை அப்பா, அம்மா, பண்ணாகம் அப்பம்மா, ஆனைபந்தி அம்மம்மா, அம்மப்பா சுவிஸ் ஆசையப்பா, அமெரிக்கா மூத்தமாமி, மாமா, சௌமியா மச்சாள், நவீன் மச்சான், நர்த்தன் மச்சான், துரைச்சித்தப்பா, லண்டன் ஆசைமாமி, மாமா, சாரு மச்சான், சின்னமாமி, மாமா, அனுஷ் மச்சான், இந்தியா கிருஷ்ணா அங்கிள், சிங்கப்பூர் தேவி சூரியா மாமி, மாமா, கொழும்பு செல்வம் மாமி, மாமா, மச்சாள், மச்சான், சுவிஸ் மாம்பழம் மாமா குடும்பத்தார், ஏழாலை அம்மா பாட்டி மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்றுப் பேர்புகழுடன் வாழ வாழ்த்தினர். மேலும் விசவத்தனை முருகன் கருணையும் வடக்கம்பரை முத்துமாரி அம்மன் திருவருளும் நெல்லியான் காளித்தாயின் பேரருளும் பெற்றுப் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ மனமார வாழ்த்தி மகிழ்ந்தனர்.

**பண்ணாகம், சுழிபுரம்.**

**தகவல்:**
**திருமதி ஆ.நடராசா**
**அப்பம்மா (பண்ணாகம்).**

(39255) (53-11-45)




# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

**உத்தியோகபூர்வ முடிவுகள்**

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 708 | டிக்கட்டின் நிறம் - நீலம் | |
| திகதி | 26-8-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. | 5643550-5659622 |

லக்கினம் தனுசு

வெற்றி இலக்கங்கள்
**13 21 50 52**

ஜக்பொட் பரிசு
ரூபா. 23,71,300/-
வெல்லப்படவில்லை
இந்த செவ்வாய்க்கிழமை
ரூபா. 31,65,350/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,55,628 | 10/- | 35,56,280/- |
| 2.இலக்கங்கள் | 32,593 | 20/- | 6,51,860/- |
| 1.இல லக்கினம் | 32,386 | 30/- | 9,71,580/- |
| 2.இல லக்கினம் | 2,981 | 100/- | 2,98,100/- |
| 3.இலக்கங்கள் | 878 | 500/- | 4,39,000/- |
| 3.இல லக்கினம் | 75 | 5,000/- | 3,75,000/- |
| 4.இலக்கங்கள் | 05 | 1,00,000/- | 5,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 23,71,300/- | - |
| | | மொத்தம் | 67,91,820/- |
| முச்சக்கர வண்டி | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 78,44,070/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 78,44,070/- தொடர் இல. 4706435 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2005 ஆகஸ்ட் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி,
கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| பொலன்னறுவை | 5644278-3-64 |
| நுவரெலியா | 5647933-5-86 |
| கம்பஹா | 5653269-9-53 |
| திருகோணமலை | 5651842-4-14 |
| கம்பஹா | 5654235-3-34 |

# பௌத்த சிங்களப் பிரதேசமாக தோற்றம் பெறும் திருமலை நகர்

## திட்டமிட்டு மாற்றும் திரைமறைவுச் சதி

திருமலையிலிருந்து சங்கீத்

மூன்று வருடகால போர்நிறுதத ஒப்பந்தத்தினைத் தொடர்ந்து அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்ட நிலையில் திருகோணமலைச் பிரதேசம் இன்று போர்க்களம் போன்று காட்சியளித்துக்கொண்டிருக்கின்றது. எங்கெங்கு நோக்கினும் இராணுவச் சாவடி பாரீர் எனற வகையில் நகரின் மூலை முடுக்கு எங்கும் படையினரின் காவலரண்களாகவும் சோதனைச்சாவடிகளாகவும் காட்சிஅளித்துக் கொண்டிருக்கின்றன. இது போதாதென்று கண்மண் தெரியாது வீதிகளில் ஓடிக்கொண்டிருக்கும் மோட்டார் சைக்கிள் படையணியும் மக்களைப்பயமுறுத்திக்கொண்டிருக்கின்றன.

புத்தர் சிலை விவகாரத்தைத் தொடர்ந்து பொதுமக்களின் பாதுகாப்புக்கென படையினரைக் காவல் காக்க வைத்திருக்கிறோம் என்று கூறியவர்கள் இன்றோ திருகோணமலை நகரையும் புறநகர் பகுதிகளையும் சுற்றிச்சூழ படையினரைக் குவித்துக் கொண்டிருக்கின்றார்கள். தேடுதல் நடவடிக்கைகளும் வழமையான நடவடிக்கைகளாக மாறிவருகின்றன.

இந்த நிலையிலேயேதான் திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்கள் பேரவையினர் நகரின் பிரதான பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள படையினரின் முகாம்களும் சோதனைச்சாவடிகளும் இன்று திங்கட்கிழமைக்கிடையில் அகற்றப்படவேண்டும். இதற்கான சகல நடவடிக்கைகளையும் மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் மேற்கொள்ளவேண்டும் எனவும் கோரியிருக்கின்றார்கள். குறிப்பாகப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் இது தொடர்பாக ஏழு எட்டு தடவைகள் பேச்சுமேற்கொண்டபோதும் இது தொடர்பான தீர்க்கமான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் இவர்கள் குறைப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

குறிப்பாக நகரின் மையப் பகுதிகளான சண்முகா இந்து மகளிர் பாடசாலையை அண்மித்த பகுதியில் உள்ள படையினரின் சாவடி, சிறிமாபுரம் சூாவடி போன்றவை உடனடியாக அகற்றப்பட வேண்டும். இத்தகைய சாவடிகள் மக்கள் மனதில் அச்ச உணர்வினையும் வேண்டாத சிரமங்களையும் உருவாக்கி வருகின்றன எனவும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் தெரிவித்திருக்கின்றார்கள்

தலைவலி போய் திருகுவலி வந்த கதையாகப் புத்தர் சிலையை அகற்றுங்கள் எனக் கேட்கப்பட்ட நிலையில் புத்தர் சிலையும் அகற்றப்படாது படையினர் குவிக்கப்பட்டதுதான் மிச்சம்.

இந்த நிலையில்தான் தமிழ் மக்கள் பேரவையினர் இந்த முகாம்களை அகற்றுவது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிபபுக் குழுவினருக்கு இன்று திங்கள் வரை அவகாசம் வழங்கியிருக்கின்றார்கள்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தையும் அவசரகாலச் சட்டத்தையும் சாட்டாக வைத்து பேரினவாதக் கும்பல்கள் திருகோணமலையை கபளீகாரம் செய்யும் நடவடிக்கைகளை மிகவும் சாதுரியமாகவே மேற்கொண்டு வருகின்றார்கள். 'இம்மென்றால் சிறைவாசம் ஏன் என்றால் வனவாசம்' என்ற கதையாகச் சட்டத்தின் பிடிகளுக்குள் மக்களை சிக்கவைத்து வாய்ப்பூட்டுப் போடும் நடவடிக்கையும் வெகுலாவகமாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

குறிப்பாக இத்தகைய காலகட்டத்தில் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக எத்தகைய எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமோ அத்தனையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்தகைய நடவடிக்கைகளின் விளைவாக நகரின் இயல்பு நிலையே வெகுவாகப் பாதிக்கப்பட்டுவிட்டது. கடந்த சில மாதங்களின் முன்னர் கண்ட திருகோணமலை நகரமா இதுவென வெளியிலிருந்து வருபவர்கள் திகைத்து தடுமாறும் அளவுக்கு இந்த நகரின் தோற்றத்தையே பௌத்த சிங்களப் பிரதேசமாகக் காட்ட எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமோ அத்தனையையும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

கடந்த சில தசாப்தங்களுக்கு முன்னர் பேரினவாதிகள் மேற்கொண்ட திட்டமிட்ட சட்டவிரோத குடியேற்றங்களினால் திருகோணமலை மாவட்டத்தின் ஒரு பகுதி கபளீகரம் செய்யப்பட்ட நிலையில் தற்போது திருகோணமலை நகரின் சாயலையே மாற்றிக் காட்டும் அளவுக்குத் திட்டமிட்ட நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில்தான் தமிழ் மக்கள் பேரவையினர் ஏழு எட்டு தடவைகளாக மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருடன் இந்த விடயம் தொடர்பாக தொடர் பேச்சு மேற்கொண்ட போதும் இவை தொடர்கதையாகவே உள்ளன.

இந்த நிலையில் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் திட்டமிட்ட இந்த நடவடிக்கைகள் தொடர்பாக என்ன செய்யப்போகிறார்கள் என்பதனை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

# 'சுடர் ஒளி' செய்தியாளர் தாக்கப்பட்டதற்கு ஊடக பிரதி அமைச்சர் வருத்தம் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.29

சுடர்ஒளி செய்தியாளர் யதுர்ஷன் தாக்கப்பட்டு அவரது கருவிகள் சேதமாக்கப்பட்டதைத் தகவல், ஊடகப் பிரதி அமைச்சர் டிலான் பெரேரா கண்டித்திருக்கிறார்.

கடந்த 22 ஆம் திகதி ஜே.வி.பியினர் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நடத்திய ஆர்ப்பாட்டத்தை அவதானித்து செய்திசேகரிக்கச் சென்றிருந்த வேளையில் சுடர் ஒளி செய்தியாளர் யதுர்ஷன் தாக்கப்பட்டு அவரது ஊடக உபகரணங்கள் சேதமாக்கப்பட்டதுடன் அவரை ஜே.வி.பி. ஆள்கள் பொலீஸாரிடம் ஒப்படைத்திருந்தனர். இது தொடர்பாக பிரதி அமைச்சர் டிலான் பெரேரா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

ஆர்ப்பாட்டக்காரருக்கு செய்தியாளர் மீது சந்தேகம் ஏற்பட்டிருந்தால் அவரை அதிகாரிகளிடம் ஒப்படைத்திருக்க வேண்டும். மாறாக அவர்கள் சட்டத்தைத் தம் கைகளில் எடுத்துக் கொண்டுள்ளார்கள். இந்தக் காட்டு மிராண்டித் தனம் கைவிடப்படவேண்டும். பொதுமக்களின் சுயாதீன உரிமைகளை மதிக்கும் எம்மால் இதை ஆதரிக்க முடியாது. நாகரிக சமூகத்தில் இம்மாதிரி செயற்பாடுகள் அங்கீகரிக்கப்படவே கூடாது.

யதுர்ஷன் தாக்கப்பட்ட சம்பவம் கேள்விப்பட்டவுடன் அவரது பத்திரத்தை உறுதி செய்ய ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்க மைவாக நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

பாகுபாடற்ற முறையில் விசாரணைகள் நடத்துவதற்கு அறிவுறுத்தல்கள் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. சுடர் ஒளி செய்தி நிறுவனத்துக்கும் பத்திரிகையாளர் யதுர்ஷனுக்கும் நாம் வருத்தம் தெரிவித்துக் கொள்கின்றோம். இம்மாதிரி சம்பவங்களை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்ளும்படி சம்பந்தப்பட்ட தரப்பினரை கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(ப)

# அமைதிப் பேச்சை ஆரம்பிப்பதில் அரசு அவசரப்பட்டுவிட்டதாம்!

## ஹெல உறுமய தலைவரின் ஆதங்கம்

கொழும்பு,ஓக.29

முன்னாள் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலைசெய்யப்பட்டதையடுத்து அமைதிப் பேச்சுக்களை தொடங்குவதில் அரசாங்கம் அவசியமற்ற முறையில் அவசரப்பட்டுவிட்டது என்று ஜாதிக ஹெல உறுமைய கண்டித்திருப்பதுடன் இனப்பிரச்சினைக்கான இறுதித்தீர்வின் மீது மட்டுமே பேச்சு நடத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அமைதிப் பேச்சுக்களை நடத்தவிருப்பது தொடர்பாக ஜாதிக ஹெலஉறுமயக் கட்சியின் தலைவர் வண.எல்லாவெல மேதானந்த தேரர் வெளியிட்டுள்ள கருத்தில் லண்டன் குண்டுவெடிப்பு மற்றும் லக்ஷமன் கதிர்காமர் படுகொலை ஆகிய வற்றிலிருந்து உலகத்தின் கவனத்தைத் திசைதிருப்புவதற்கே புலிகள் அமைதிப்பேச்சுக்கு வரவிரும்புகிறார்கள். வடக்கு - கிழக்கிலும் ஏனைய பகுதிகளிலும் இடம்பெறும் கொலைகளைத் தடுத்துநிறுத்துமாறாவது புலிகளை அரசு கேட்டுக்கொள்ள வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைதி முயற்சிகளில் நோர்வேஜியர்கள் ஈடுபடுவதையும் கண்காணிப்புப் பணிகளில் ஸ்கனேடியர்கள் ஈடுபடுவதையும் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் தேரர் வற்புறுத்தியுள்ளார்.

(ப)

# இலவச மருத்துவ சேவை விஸ்தரிப்பு

தென்மராட்சி,ஓக.29

லண்டன் தமிழ் மருத்துவர் சங்கத்தின் அனுசரணையுடன் சாவக்சேரி விநாசித்தம்பி வீதி ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடத்தப்பட்டு வரும் இலவச மருத்துவ சேவை இன்று முதல் விஸ்தரிக்கப்படவுள்ளது.

இதுவரை வாரத்தில் மூன்று தினங்கள் நடத்தப்பட்டு வந்த இலவச மருத்தவசேவை இன்று முதல் வாரத்தில் ஐந்து தினங்கள் (திங்கள் தொடக்கம் வெள்ளி) வரை பி.ப.2 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடத்தப்படவுள்ளது. (எ-117)

# களுத்துறை முதல் வல்வெட்டித்துறைவரையிலான கடலோரப் பாதுகாப்புப் பிரதேசத்தில் தென்னை பயிரிட நடவடிக்கை அவசியம்

காரைதீவு,ஓக.29

களுத்துறை தொடக்கம் வல்வெட்டித்துறை வரையிலான கடலோரப் பாதுகாப்பு வலயத்தில் தென்னைப் பயிர்ச்செய்கையை அரசு ஊக்குவிக்கவேண்டும்.

அதனூடாக இலங்கையில் தென்னை பயிரிடும் நிலப்பரப்பின் அளவு மேலும் 50 ஆயிரம் ஏக்கர்களால் அதிகரிக்கும்.

இவ்வாறு டிசி.மில்லர் நிறுவன உதவியாளர் நியோமிபெரேரா தெரிவித்தார்.இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட கடலோரப்பாதுகாப்பு வலயம் தற்போது அரசின் பிடியிலுள்ளது. அந்தப் பகுதியில் தனியார் தொண்டர் நிறுவனங்களுடன் இணைந்து தென்னைப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்க அரசு முன்வரவேண்டும்.

இவ்வாறு தென்னைவளர்ப்பது கடலரிப்பைத் தடுப்பதுடன், மக்களின் வாழ்வாதாரத்திற்கும் உதவும். தென்னைமரம் சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்க்கும் மரமாகும்.

தற்போது சந்தையில் தேங்காயின் விலை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. தென்னைப் பயிர்ச்செய்கையை மேம்படுத்தினால் தேங்காயின்விலை குறைவடைய வாய்ப்பிருக்கிறது. தென்னைச்செய்கைச்சபை, தெங்கு அபிவிருத்திஅதிகாரசபை என்பன இது விடயத்தில் கவனமெடுத்தால் தேங்காய் உற்பத்தியில் தன்னிறைவு அடையலாம் - என்று கூறினார். (ஒ-85)

# வேலணை செட்டிபுலத்தில் ரூ.3 லட்சம் செலவில் மீன்சந்தை

யாழ்ப்பாணம்,ஓக.29

வேலணை செட்டிபுலம் பகுதியில் மீன் விற்பனை நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

ஐ.நா.அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவியுடன் வேலணைப் பிரதேசசபை இந்த மீன்விற்பனை நிலையத்தை நிறுவி வருகின்றது என வேலணைப் பிரதேச சபையின் செயலாளர் கைலாசபிள்ளை மகேந்திரலிங்கம் தெரிவித்தார். சுமார் 3 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் இந்த மீன் விற்பனை நிலையம் மூலம் மீனவர்கள் நன்மை பெறக்கூடியதாக இருக்கும் என்றும் - செயலாளர் மேலும் கூறினார்.

இதேவேளை -

ஐ.நா.அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவியுடன் வேலணை செட்டிபுலம் வீதி, கலைமகள் வீதி என்பன புனரமைக்கப்பட்டு வருகின்றன என்றும் -

இதற்கு ஐ.நா.அபிவிருத்தித் திட்டம் 9 லட்சத்து 75 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ)

# வாசிப்பை ஊக்குவிக்க எழுத்தறிவுத் தினம் பிரகடனம்

சர்வதேச எழுத்தறிவு தினத்தை முன்னிட்டு செப்ரெம்பர் 2ஆம் திகதி தொடக்கம் 8ஆம் திகதிவரையான காலப்பகுதியை எழுத்தறிவு வாரமாக கல்வி அமைச்சு பிரகடனப்படுத்தியுள்ளது. இக்காலப்பகுதியில் இலங்கையில் உள்ள சகல பாடசாலைகளிலும் இத்தினம் கொண்டாடப்படவுள்ளது.

எழுத்தறிவு வாரத்தில் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு பாடசாலைகளில் அவை அமுலாக்கம் செய்யப்படவுள்ளன.

பாடசாலை மாணவர்களில் எழுத்தறிவில் பின் தங்கிய மாணவர்களை இனம்கண்டு அவர்களுக்கான பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

* எழுத்தறிவு தின பதாகைகள் தொங்கவிடப்படுதல்.
* வாசிப்பு நிலையங்களின் பயன்பாட்டை மக்களுக்கு உணர்த்துதல்.
* எழுத்தறிவுதின பயன்பாட்டை மாணவர்கள், மக்கள் புரிந்துகொள்ளும் வகையில் தெருக்கூத்து, விவாதங்கள், நடனங்கள், கவியரங்குகள், போட்டிகள் போன்றவற்றை நடத் துதல்
* கட்டாயக்கல்விக்குழுவால் இனங்காணப்பட்ட பாடசாலை செல்லாத பிள்ளைகள் மற்றும் இடைவிலகிய மாணவர்களை இனங்கண்டு பாடசாலைகளில் சேர்த்துக் கொள்ளல். (எ-152)



காரைநகர்ப் பிரதேசத்திற்கு குடிதண்ணீர் வழங்குவதற்காக காரை. நலன்புரிக் கழகத்தினால் வழங்கப்பட்ட பவுஸர் கையளிப்பு வைபவமும், குடிதண்ணீர் விநியோக அங்குரார்ப்பண வைபவமும் காரைநகர் மடத்துக்கரையில் அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம் இது.

காரைநகர் உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன், காரைநகர் மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையினரிடம் பவுஸரை வைபவ ரீதியாகக் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

(படம்: காரைநகர் செய்தியாளர்)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
20 - 10 - 1920

மறைவு
08 - 09 - 2004

### திருமதி தம்பிப்பிள்ளை தங்கம்மா

திதி: தசமி 29.08.2005

'மண்ணில் பிறந்த நாள் முதலாய் எம்மை
கண்ணின் மணியாய் கருதி வளர்த்தாயே!
பெண்ணின் பெரும் தகையே! பேரோடு புகழ் பெற்று
வண்ணமுற வாழ்வில் வளம் தந்த தெய்வமே!
கண்ணில் நீர் சொரிய காலமெல்லாம் நினைக்கின்றோம்.

விக்கினேஸ்வரா வீதி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

- குடும்பத்தினர்.

(சி-44843) (39-24-14-17)

## பன்னாலையில் நடந்த கால்கோள் விழா

150ஆவது ஆண்டு நிறைவினைப் பூர்த்தி செய்யும் பன்னாலை சேர் கனகசபை அ.த.க. பாடசாலையின் சிறப்பு நிகழ்வுகளின் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது.

150 ஆவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடுமுகமாகப் பரிசளிப்பு வைபவம், மனையியல்கூடத் திறப்புவிழா, மலர் வெளியீடு என்பன நடைபெற்றன.

பாடசாலை அதிபர் சி.சிவராஜன் தலைமையில் நடைபெற்ற கால்கோள் விழாவில் பழைய மாணவர்கள் பலர் கலந்துகொண்டனர். இங்கிலாந்தில் இருந்து வருகை தந்துள்ள இப்பாடசாலையின் பழைய மாணவன் பொன்னையா குகநேசனும் அவரது துணைவியாரும் இணைந்து பாடசாலை மனையியல்கூடத்தை அமைப்பதற்கென நிதியுதவியினை வழங்கினர்.

தமது தந்தையாரான அமரர் அதிபர் வை. பொன்னையா ஞபகார்த்தமாக அவர்கள் மூன்று லட்சத்து நூறு ரூபாவை அதிபர் சி.சிவராஜனிடம் கையளித்தனர்.

மேலும், இங்கிலாந்தில் வசிக்கும் பழைய மாணவரான இந்துப் பேரவைப் பொறுப்பாளர் இராமநாதன் குடும்பத்தினரும் பாடசாலை தேவைகளுக்கென ஒரு லட்சம் ரூபாவினை வழங்கியுள்ளனர்.

தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் விசேட விருந்தினராகக் கலந்துகொண்டார்.

ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி நடைபெறவுள்ள 150ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வின் ஞாபகார்த்தப் பரிசில் பாடசாலை சமூகத்தினரால் குகநேசன் தம்பதியினருக்கு வழங்கப்பட்டது. (எ-152)


## PRESIDENT CFL



பல்புகள் இப்போது
இலகு தவணையில் கிடைக்கும்

- SLS இன் FIVE STAR தரச்சான்று
- DNV Norway யின் ISO 9000 சான்று
- 8000 Hours Life Time
- President Lighting Singapore நிறுவனத்துடன் சேர்ந்து ஏற்றுமதிக்காகத் தயாரிக்கப்பட்டது.
- இலங்கை உற்பத்தி, ஒரு வருட உத்தரவாதம்.

உங்களது விலாசத்தை உறுதிப்படுத்தும் இறுதிமாத மின்சாரப் பட்டியலுடன் அடையாள அட்டையும் கொண்டு வரவேண்டும்.

தொடர்பு: **Light Line,**
580, K.K.S. Road, Jaffna. T.P.: 0777 224556.

(38860) (21.13.34)


### அனைத்து வட இலங்கை ஊடகவியலாளர்களுக்கும் விடுக்கப்படும் ஒரு திறந்த அழைப்பு

## ஊடகவியலாளர் கழகம் (Press Club) அமைப்பதற்கான ஆலோசனைக் கூட்டம்

வட இலங்கையின் ஊடகவியலாளர் நலன்களைக் கருத்திற் கொண்டு வடபகுதி நாளிதழ்களின் ஆசிரியர்களையும் ஊடகவியலாளர் சங்கங்களையும் காப்பாளர்களாக வைத்து அனைத்து ஊடகவியலாளர்களையும் அங்கத்தவர்களாக்கிய பத்திரிகையாளர் கழகம் ஒன்றை நிறுவுவது பற்றி ஆலோசிப்பதற்கான கூட்டம் ஒன்று ஆவணி மாதம் 30ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.


தனிப்பட்ட அழைப்புகள் எதுவும் அனுப்பப்படமாட்டா. இரவுணவு ஒழுங்குசெய்யப்படவிருப்பதால் வரவிரும்பும் பத்திரிகையாளர்கள் தமது பெயர்களைத் திங்கள் பிற்பகல் 6 மணிக்கு முன்னர் பதிவு செய்யவும். **அனைத்து ஊடகவியலாளர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

(சி/44840) (24-14-17)

**பேராசிரியர் அ.சண்முகதாஸ்**
பணிப்பாளர், ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையம், யாழ். பல்கலைக்கழகம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
11 - 08 - 1924



உதிர்வு
30 - 07 - 2005

### அமரர் இரத்தினம் தங்கம்மா

திதி 29.08.2005

எங்கள் உறவுகளை விட்டுப் பிரிய
உனக்கென்ன அவசரம்
கேட்கும் ஓசை எல்லாம்
உன் ஓசை போல் உணர்கின்றோம்
உன்னைக் காணாது கண்கள்
உறங்க மறுக்கின்றன
உன்னைப் பிரிந்திட்டு எங்கள் உள்ளங்களை
ஊமையாக்கிப் பார்ப்பதில்
படைத்தவனுக்கு என்ன லாபம்! எம் நினைவில்
என்றும் அகலா அரும்பெரும் தெய்வமே!
உம் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கரணவாய் மத்தி,
கரவெட்டி.

(39386) (24-14-17)

- குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### K.R.சிவலோகநாதன் விதுர்ஷன்



காங்கேசன்துறை வீதி, கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த K.R.சிவலோகநாதன் விதுர்ஷன் 25.08.2005 அன்று இந்தியாவில் காலமானார்.

அன்னார் K.R. சிவலோகநாதன் (இராசம் அரிசி ஆலை, சுன்னாகம்) - இராஜதேவி தம்பதியரின் அன்பு மகனும் யதுர்ஷன், நிதுர்ஷன் ஆகியோரது சகோதரனும் இராசையா, இராசம்மா, செல்வராஜா, விமலாதேவி ஆகியோரது பேரனும் சச்சிதானந்தம், கைலாயபிள்ளை(சிறி - ரசிக்கா புறப்பெட்டி டெவலப்மன்ஸ்), சிவஞானசுந்தரம்(சிவா), விக்னேஸ்வரன், சிவகுமார், கங்காதரன், பாலசுப்ரமணியம், ஹேமலதா, பாமதி, அமுதா, தசிந்தா, கலாநிதி, றாஜினி, சுபாஜினி ஆகியோரது பெறாமகனும் சண்முகேஸ்வரன் (இளைப்பாறிய தொலைபேசி அத்தியட்சகர்), Dr.மகாதேவன்(யாழ்.போதனா வைத்தியசாலை), தேவராஜா (முகாமைத்துவ, வணிக பீடாதிபதி யாழ்.பல்கலைக்கழகம்), வசந்தகுமார், ஜெயக்குமார், விஜயகுமார், பூமணி, இராணி, லக்சுமிதேவி, சோதி, இந்தி, கலா ஆகியோரது மருமகனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2005) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மாலை 4 மணிக்கு கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**K.K.S.** வீதி,
கோண்டவில் மேற்கு.

(சி-44832) (25-14-24)

தகவல்:
**க.இராசையா** (பேரன்).


Error

வேலைவாய்ப்பிற்கு ஏற்றவாறு கணனிக் கற்கைநெறியை தெரிவுசெய்ய முடியாத நிலையில் உள்ளீர்களா?

Abort | Retry | Go to NIIT

'தொழில் நிறுவனங்களின் தேவைக்கு ஏற்றவாறு எமது கற்கைநெறிகள் வடிவமைக்கப்பட்டிருக்கிறது'

- Strong coverage of Core Concepts, Fundamentals and Software Engineering Skills
- Latest Key Technologies- J2EE, J2ME,.NET,
- Professional Certification Mapping-MCSD, MCSE, JSP
- Focus on Soft Skills

northumbria UNIVERSITY

**Final Year**
B.Sc. Honors Degree in Applied Computing (9 Months in Uk)

**DNIIT**
Professional Diploma in Information Technology (2 Years in Sri Lanka)

**Microsoft certified**
MCSE Windows Server 2003
MCSD on .NET Technologies

**Futurz**
Certificate in Information Technology
Honors Diploma in Information Technology
Advance Diploma in Information Technology
Professional Diploma in Information Technology

**CATS**
Ready for the next level?
VB.NET & ASP.NET
JAVA & J2EE
C++ & Linux
XML & DHTML

**SWIFT**
Certificate in MS Office XP
Certificate in Web Designing
Macromedia Flash
Macromedia Dreamweaver

ஆசியாவின் முதல்தர கணனி நிறுவனமான NIIT வழங்கும் விசேட அதிரடிச்சலுகை

Microsoft Office XP இல் குறைந்த கட்டணத்துடன் சர்வதேச தரச் சான்றிதழை பெற்றிட Sep 10 ற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்


**NIIT Branches**

| | | | |
|---|---|---|---|
| Union Place | 011 4 720790 | Gampaha | 033 4 673222 |
| Nugegoda | 011 4 408770 | Anuradhapura | 025 4 581003 |
| Kurunegala | 037 4 691000 | Bambalapitiya | 011 4 519111 |
| Kandy | 081 4 470900 | Trincomalee | 026 2 227767 |
| Jaffna | 021 2 227250 | Tissamaharama | 047 4 378930 |
| Rukmalgama | 011 4 304238 | | |

**NIIT**
Get Trained by the Leader
"IDC,USA has named NIIT as the Largest Asia-Based IT Training Provider"

Most Advanced IT Curriculum Currently Available In Sri Lanka.

# அணுகுண்டுத் தயாரிப்பின் அடிப்படைத் தத்துவம் ஐன்ஸ்ரைனுடையது!


ஐன்ஸ்ரைனின் பல்வேறுபட்ட தோற்றங்கள்.

அரசியலும் ஐன்ஸ்ரைனின் வாழ்க்கையில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியது. நாசிகள் ஜேர்மன் அதிகாரத்தைக் கைப்பற்றியவுடன் ஐன் ஸ்ரைனின் கொள்கைகள் பிழையானவை என உத்தியோகபூர்வமாகப் பிரகடனப்படுத்தினார்கள். அதற்குரிய காரணம் அக்கொள்கைகள் ஒரு யூதரால் உருவாக்கப்பட்டன என்பது ஆகும். அத்துடன், ஜேர்மனியில் இருந்த அவரின் சொத்துகளெல்லாம் நாசிகளால் சுவீகரிக்கப்பட்டன. இவற்றைவிட அவரின் உயிருக்கும் நாசிகள் விலை ஒன்றைத் தீர்மானித்திருந்தார்களாம்.

அமெரிக்காவிலுள்ள விஞ்ஞானிகளுக்கு ஜேர்மனியில் நாசிகள் அணுகுண்டைத் தயாரித்து விடுவார்கள் என்ற பயம் இருந்ததாம். இதனால் அமெரிக்க அரசியல்வாதிகளிற்கு அணுகுண்டின் அபாயத்தை விளக்க அமெரிக்க விஞ்ஞானிகள் கடிதமொன்றை எழுதி அதை ஐன்ஸ்ரைனைக்கொண்டு கையொப்பமிட்டு அப்போதைய ஜனாதிபதி ரூஷ்வெல்டிற்கு அனுப்பினார்களாம். அந்தக் கடிதமே அமெரிக்க அரசு அணுகுண்டைத் தயாரிக்க வேண்டும் என்ற துரதிஷ்ட முடிவை எடுக்க வைத்தது. ஆயினும் அணுகுண்டுத் தயாரிப்பு முயற்சியில் ஐன்ஸ்ரைன் எந்தவிதத்திலும் ஈடுபடவில்லை. ஆனால் ஐன்ஸ்ரைனின் பிரசித்த சமன்பாடான $E=MC^2$ என்ற சமன்பாட்டால் ஏற்பட்ட அழிவுகளை எண்ணி எப்போதும் கவலையுடனேயே இருந்தாராம். அத்துடன் அதன்பின் அவரின் மரணம்வரை ஐன்ஸ்ரைன் அணுகுண்டுத் தயாரிப்பிற்கு எதிராகக் குரல்கொடுத்த வண்ணமே இருந்தாராம். மிக அண்மைக் காலங்களில் வெளிவந்த செய்திகளில் நாசிகள் அந்நாளிலேயே அணுகுண்டை தயாரித்து வைத்திருந்தார்களாம்.

ஐன்ஸ்ரைன் பிறின்ஸ்டனிற்குச் சென்ற முதல் வருடத்தில் வந்த நத்தார் பண்டிகையின் போது ஒரு சுவாரஸ்யமான நிகழ்வு நடந்ததாம். சில சிறு பிள்ளைகள் நத்தார் பாடல்களைப் பாடியபடி அவரின் வீட்டு வாசலில் வந்து நின்றார்களாம். பாடல் பாடி முடிந்ததும் ஐன்ஸ்ரைனின் வீட்டுக் கதவைத் தட்டி தாங்கள் நத்தார் பரிசுகள் வாங்க பணம் சேகரிப்பதாக ஐன்ஸ்ரைனிடம் கூறினார்களாம்.

''ஒரு கணம் நில்லுங்கள்'' என்று கூறி

**நாகலிங்கம் சிவயோகன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பௌதிகவியல் துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

வீட்டு உள்ளே சென்ற ஐன்ஸ்ரைன் தனது வயலினை எடுத்து வந்து, அந்தப் பிள்ளைகளிடம் நானும் பணம் சேர்க்க வருகிறேன் என்று தனது வயலினில் ''அமைதியான இரவு'' (Silent Night) என்ற பிரபல பாடலை தனது வயலினில் இசைத்தபடி ஒவ்வொரு வீடாக அச் சிறு பிள்ளைகளுடன் சென்று பணம் சேர்த்தாராம்.

ஐன்ஸ்ரைன் தனது தொடர்பியல் கொள்கைகளையும், சொட்டுப் பொறியியலையும் இணைத்து ஒன்றுபடுத்திய கொள்கை (Unitied Theory) ஒன்றை உருவாக்கப் படாத பாடுபட்டார்.

அதன் மூலம் முழு அகிலத்தையும் புரிந்து கொள்ள முடியும் என்றும் நம்பினார். ஆனால், துரதிர்ஷ்ட வசமாக அவர் அந்த ஒன்றுபடுத்திய கொள்கையை உருவாக்கி முடிக்க முன்னரே இந்த உலகைவிட்டுப் பிரிந்து போனார்.

ஒருமுறை தொடர்பியல் கொள்கை சரியானதா, தவறானதா என ஐன்ஸ்ரைனிடம்

**2005 ஆம் ஆண்டு உலக பௌதிகவியல் ஆண்டு என்றும் ஐன்ஸ்ரைன் ஆண்டு என்றும் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையும், தூய - பிரயோக - பௌதிகவியல் கூட்டுறவு அமைப்பும் இணைந்து இந்தப் பிரகடனத்தைச் செய்திருக்கின்றன.**

**'அகிலத்தின் ஆசான்' எனவர்ணிக்கப்படும் விஞ்ஞானி ஐன்ஸ்ரைனின் 50 ஆவது சிரார்த்த தினத்தை முன்னிட்டே இந்தப் பிரகடனம். அதனையொட்டி இந்த சிறப்புக் கட்டுரைத் தொடரை தருகிறார் யாழ். பல்கலைக்கழக பௌதிகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நாகலிங்கம் சிவயோகன்.**

கேட்டபோது எனது தொடர்பியல் கொள்கை சரியானதென நிரூபிக்கப்பட்டால் ஜேர்மனியர் என்னை ஒரு ஜேர்மன்காரன் என்றும் , சுவிஸ்காரர்கள் என்னை ஒரு சுவிஸ் பிரஜை என்றும், பிரான்சு தேசத்தவர்கள் என்னை ஒரு பெரிய விஞ்ஞானியென்றும் அழைப்பர். ஆனால் தொடர்பியல் கொள்கை தவறென

**ஐன்ஸ்ரைன் ஆண்டு சிறப்புக்கட்டுரை 5**

நிரூபிக்கப்பட்டால் பிரான்சு தேசத்தவர்கள் என்னை சுவிஸ்காரன் என்றும், சுவிஸ்காரர்கள் என்னை ஜேர்மனியன் என்றும், ஜேர்மனியர் என்னை ஒருயூதன் என்றும் அழைப்பார்கள் என்று கூறியுள்ளார். (If relativity is Proved right, the Germans will Call me a German, The Swiss will call me a Swiss Citizen and French will call me a great Scientist. If Relativity is Proved wrong, The French will Call me a Swiss, The Swiss will Call me a German and The Germans will Call me a Jew) அவரின் இக் கூற்று மிகவும் பிரபலமானது. இதில் ஒவ்வொரு நாட்டவர்களும் எவ்வாறு அழைப்பார்கள் என்பதை விட அந்நேரத்தில் அந் நாடுகளுக்கிடையேயிருந்த அரசியல் நிலைவரங்களையும் தெளிவாக எடுத்துக் காட்டியது. அதாவது அவரது தொடர்பியல் கொள்கை சரியென நிரூபிக்கப்பட்டு அவர் பிரபலமடைந்தால் அவரைசொந்தம் கொண்டாட அந்நாட்டவர்கள் உள்ளதை உள்ளபடியே கூறுவார்கள்.

ஆனால் அவரது தொடர்பியல் கொள்கை தவறென நிரூபிக்கப்படும் போது அந்நாடுகள் அவருடன் தமக்குத் தொடர்பில்லை என்று கூறுவதோடு, ஒவ்வொரு நாடும் மற்றைய நாடுகளுடன் தமக்கிருந்த கசப்புணர்வுகளையும் சேர்த்துக் காட்டும். ஆயினும் இன்று அவர் உலக நாடுகள் எல்லாம் சொந்தம் கொண்டாடுமளவிற்குச் சாதனை படைத்த விஞ்ஞான மேதையாக உள்ளார்.

அநேகமான பெற்றோர்களுக்குத் தமது பிள்ளைகள் ஏனையோரால் போற்றப்படுவதைக் காணும் பாக்கியம் கிடைப்பதில்லை. அதேபோன்றே ஐன்ஸ்ரைனின் பெற்றோர்களுக்கும் ஏற்பட்டது. ஐன்ஸ்ரைனின் அப்பாவிற்குத் தனது மகன் ஒரு பொறியியலாளராக வந்து தன்னுடைய வியாபாரத்தில் உதவ வேண்டும் என்ற ஆசை இருந்தது. ஐன்ஸ்ரைன் சரியாகப் படிக்கவில்லை என்ற கவலையும் அவரிற்கு இருந்தது. எப்படியோ ஐன்ஸ்ரைன் படித்து முடித்து வேலைக்குச் சேர்ந்த ஆண்டே அவரின் அப்பாவான ஹேர்மன் ஐன்ஸ்ரைன் (Herman Einstein, 1847-1902) காலமாகிவிட்டார். அல்பேர்ட் ஐன்ஸ்ரைனால் 1905 ஆம் ஆண்டு எழுதப்பட்ட கட்டுரைகள் உலகை உலுக்கியதைப் பார்த்திருந்தால் அவர் நிம்மதியாக உலகைவிட்டுப் போயிருப்பார். ஆயினும் ஐன்ஸ்ரைனின் தாய் அந்நேரம் உயிருடன் இருந்தார். ஐன்ஸ்ரைனிற்கு 1921 ஆம் ஆண்டிற்கான நோபல் பரிசு 1922 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. அந்த மகத்தான செய்தியைக் கேட்கத் தாயார் கொடுத்து வைக்கவில்லை. ஐன்ஸ்ரைனின் தாயார் பௌலின் கோச் (Pauline Koch, 1858-1920) அதற்கு இரண்டு வருடங்களின் முன்னரே காலமாகிவிட்டார். ஆயினும் ஐன்ஸ்ரைனின் தங்கை மாஜாவினால் (Maja, 1881-1951) அவரின் முழுத் திறமைகளையும் காண முடிந்தது.

ஐன்ஸ்ரைன் கடவுளை நம்பினாரா இல்லையா? என்பது பலரது கேள்வி. ஐன்ஸ்ரைனின் தந்தையான ஹேர்மன் எந்த மதத்தையும் பின்பற்றாத ஒரு யூதராக வாழ்ந்தாராம். ஐன்ஸ்ரைன், பைபிள் ஒரு தேவலோகம் பற்றிய கதைகளின் தொகுப்பு என்று கருதியதோடு அவரின் சொந்தச் சமயத்தை அவரிற்கு 13 வயது இருக்கும் போதே நிராகரித்தாராம். அத்துடன் எந்த மதமும், மத சம்பிரதாயங்களும் தேவையற்றவை எனவும் கூறியுள்ளார். அவர் இறக்கும் வரை தனது யூதமதத்தைக் கூடப் பின்பற்றவில்லை. ஆயினும் தனது திட்டங்கள், கொள்கைகளெல்லாம் கடவுளிடமிருந்து தான் வந்தவை எனக் கூறியுள்ளார்.

ஐன்ஸ்ரைன் தனது நண்பர்களில் ஒருவரான எட்கர் மேஜர் (Edgar Mayer) என்பவரிற்கு 02.01.1915 திகதியிட்டு எழுதிய கடிதமொன்றில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். '' நீ ஏன் கடவுள் ஆங்கிலேயரைத் தண்டிக்க வேண்டுமென்று எனக்கு எழுதுகிறாய்? எனக்கும் கடவுள் அல்லது ஆங்கிலேயர் இரு வரிற்குமிடையில் நெருங்கிய தொடர்பு ஏதும் கிடையாது. கடவுள் தனது குழந்தைகள் பலரை அவர்களின் அறியாமைக்காகத் தண்டிப்பதை நான் மிகவும் கவலையுடன் பார்த்துக் கொண்டிருக்கிறேன். இதற்கான பொறுப்பை கடவுளே ஏற்கவேண்டும். கடவுள் இல்லை என்பது மட்டுமே அவரை மன்னிக்கும்''

பிறின்ஸ்ரனிலுள்ள கணிதத்துறைக் கட்டடத்தில் ஐன்ஸ்ரைன் கடவுள் சாதுரியமானவர் ஆனால் அவர் குரோத மற்றவர்'' (God is Subtle, But he is not Malicious) என்பதாகும். இதன் மூலம் ஐன்ஸ்ரைன் கூற வந்தது என்னவென்றால் ''விஞ்ஞானிகள் தமது பாதையில் கஷ்டங்களைக் காணலாம். ஆனால் நம்பிக்கையின்மையைக் காணக்கூடாது'' என்பதாகும். அத்துடன் இந்த அகிலம் மிகவும் சிக்கலானது. அவ்வளவு சிக்கலான ஒன்றைக் கடவுள் ஒருவரால் தான் உருவாக்க முடியும் எனவும் ஜன்ஸ்ரைன் கூறினார்.

(வளரும்)

# ஐன்ஸ்ரைனின் கட்டுரைகள் எத்தனை தெரியுமா?

ஐன்ஸ்ரைனின் ஆய்வுக் கட்டுரைகள் எவ்வளவு பிரபலமானவை என்பதை அறிவதற்கு அவரது கட்டுரைகளை மேற்கோள் காட்டி வெளிவந்த கட்டுரைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதைப் பார்ப்பது அவசியமாகும். இதற்கு அமெரிக்காவிலுள்ள பிலடெல்பியா (Philadelphia) எனுமிடத்திலுள்ள தொம்சன் ISI நிறுவனத்தால் வெளியிடப்படும் ''விஞ்ஞான மேற்கோள் காட்டி'' (Scince Citation Index) எனும் புத்தகத்திலுள்ள விவரங்களைக் கவனிக்க வேண்டும். இதிலுள்ள தகவல்களின் படி 1900ஆம் ஆண்டிற்கு முதல் (அதாவது ஐன்ஸ்ரைனின் கண்டுபிடிப்புகள் வெளிவர முன்னர்) வெளிவந்த கட்டுரைகளை உசாத்துணையாக மேற்கோள் காட்டிய கட்டுரைகளின் எண்ணிக்கை சுமார் 4 இலட்சங்களாகும். அத்துடன் 1930 ஆம் ஆண்டிற்கு முதல் (அதாவது ஐன்ஸ்ரைனின் கண்டுபிடிப்புகளும் வெளிவந்த ஆரம்ப காலங்களையும் சேர்த்துப்பார்க்கும் போது) வெளிவந்த கட்டுரைகளை உசாத்துணையாகமேற்கோள்காட்டியகட்டுரைகளின்மொத்த எண்ணிக்கை சுமார் 12இலட்சங்களாகும்.

ஐன்ஸ்ரைனின் 1930ஆம் ஆண்டிற்கு முதல் வெளிவந்த கட்டுரைகளில் ஆகக்கூடிய தரம் மேற்கோள் காட்டப்பட்ட கட்டுரை அவரின் பிரௌண் இயக்கம் (Brownian Motion) பற்றியதும். அவரது Ph.D கட்டுரைகளைப் பற்றியுமாகும். இது மொத்தம் 2600 தடவைகள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. 1905இல் வெளிவந்த ஐன்ஸ்ரைனின் பிரபலமான சிறப்புத் தொடர்பியல் கட்டுரை 1974 ஆம் ஆண்டிலிருந்து கிட்டத்தட்ட 450 தடவைகள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. 1935 இல் வெளிவந்த ஐன்ஸ்ரைனின் EPR - முரணோடி கட்டுரை சுமார் 2000 தடவைகள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக வெளிவரும் கட்டுரைகளை அவதானித்த போது ஐன்ஸ்ரைனின் கட்டுரைகளே முதலிடம் பெறுகின்றன. 1990 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை வெளிவந்த கட்டுரைகளில் மேற்கோள் காட்டப்பட்டிருந்த 1930 முன்வெளிவந்தகட்டுரைகளின் விகூரத்தைக் கீழே காணலாம்.

| | |
|---|---|
| ஐன்ஸ்ரைன் | 3025 |
| மீபைய் (Debye) | 1592 |
| போர்ண் (Born) | 1575 |
| லங்முர் (Langmuir) | 1564 |
| றேலிச் (Rayleigh) | 1503 |
| வொன் சுமோலுச் சோவ்கி (Von Smoluchowski) | 1356 |
| இவால்ட் (Ewald) | 979 |
| மாக்ஸ்வெல் (Maxwell) | 812 |
| வேய்ல் (Weyl) | 812 |
| டிராக் (Dirac) | 779 |
| பொயின்கேர் (Poincare) | 730 |
| மீ (Mie) | 698 |
| சிரேடிங்கர் (Schrodinger) | 648 |
| கிளேன் (Klein) | 610 |
| ரெய்லர் (Taylor) | 601 |
| பௌலர் (Fawler) | 573 |
| பரடே (Faraday) | 559 |
| கிப்ஸ் (Gibbs) | 552 |
| ஹைசன் பேர்க் (Heisenbery) | 540 |
| போர் (Bohr) | 532 |

இத் தரவுகளிலிருந்து ஐன்ஸ்ரைனின் கட்டுரைகள் வெளிவந்து 60 ஆண்டுகளின் பின்னர் கூட இன்றும் முன்னணியில் நிற்கும் ஆராய்ச்சிகள் ஐன்ஸ்ரைனால் கண்டு பிடிக்கப்பட்ட விடயங்களின் தொடர்ச்சியே என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Kodak படச்சுருள், படப் பிரதியாக்கும் நவீன ரக இயந்திரம் (4R மட்டும்) விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.No. 0776523229, 0777252109. (39295)

## காணி விற்பனைக்கு

யாழ்.நகர் A-9 வீதிக்கு அண்மையாக தபால் கட்டைச் சந்தியில் அரவிந்தன் வடலி வீதி (A.V.றோட்), ஊடாக உப்புக்குளம் வீதியில் இரண்டாவது காணி 2½ பரப்புக் கொண்டது. உடன் விற்பனைக்குள்ளது. தொடர்பு: க.சோம சுந்தரம். 0779005635. (39329)

திருநெல்வேலி யாழ்.பல்கலைக்கழகத் திற்கு முன்பாக சேர் பொன். இராமநாதன் வீதியில் கிணற்றுடன் 3 பரப்புக்காணி விற் பனைக்குண்டு தரகர் தேவையில்லை. தொடர்பு: 021 222 2521. (39385)

## வீடு விற்பனைக்கு

சபாதிப்பிள்ளை வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகத்தில் 3½ பரப்புக்காணியுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு உடன் விற்பனைக் குண்டு. தொடர்பு: S.பத்மதேவி 0777 592656. (39393)

## வீடும் காணியும் விற்பனைக்கு

சாவகச்சேரி, மட்டுவில் கிழக்கு பொற் கொல்லர் வீதியில் 6½ பரப்புக் காணியில் 5 அறை, ஹோல், குளியல் அறை, கிணறு, வான் பயிர்களுடன் கூடிய வீடும் வளவும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.சோமசுந்த ரம். T.P.: 0779005635. (39330)

ஊரெழுப் பிள்ளையார் கோயிலுக்கு அரு கில் ஆறு பரப்புடன் கூடிய புதிய வீடு விற் பனைக்குண்டு. தொடர்பு: T.பொன்னுத் துரை, K.K.S. றோட், இணுவில் கிழக்கு. (சிமெந்துக் கூட்டுத்தாபனத்திற்கு அருகில்) T.P.: 077 6180694. (39333)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள் 44/=. பேட்டுக் குஞ்சுகள் 05.09.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளையிலும் சுட்டிபாம் - வட்டுக் கோட்டை, சந்நிதி பாம் - தொண்டைமானாறு, ஐங் கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவ கச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - #19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(39289)

## தவறிவிட்டது

ராஜரட்ணம் சர்வானந்தா என்பவரு டைய தேசிய அடையாள அட்டை, வாகன அனுமதிப்பத்திரம் தொழில் அனுமதி அட்டை ATM காட் (BOC), CASHLINE காட் (HNB) என்பன அடங்கிய பேர்ஸ் யாழ். நகரப் பகுதியில் 25-08-2005 அன்று தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் 82/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.No: 0777 751207. (39415)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், A/L உயர்தர சித்திபெற்ற, லண்டனில் நிரந்தர வதிவுரிமை பெற்ற, 1970 ஆம் ஆண்டு, பரணி நட்சத் திரம், நற்குணமுள்ள, அழகிய மணமகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளைத் தேடு கின்றனர். தொடர்பு:-0776153250. (39328)

## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங் கப்படும். பழுதுபார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ். போன் சொப்**

10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (திறீ ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம். (A/44496)

## தேவை

சகல சமையல் வேலை தெரிந்த அனுப வமுள்ள ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: **அபர்ணா உணவகம்**
பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம். (39396)



## வேலணை மேற்கு சிற்பனை முருகன் ஆலய பார்த்திப வருட மகோற்சவ நிகழ்வுகள் (கன்னி)

**திருவிழா விவரங்கள்**

31-08-2005 புதன்கிழமை காலை 7 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி 11மணிக்குக் கொடியேற்றம் நடைபெறும்.

09-09-2005 வெள்ளிக்கிழமை 11 மணிக்கு இரதோற்சவம் நடைபெறும்.

10-09-2005 சனிக்கிழமை சங்காபிஷேகம் (1008) நடைபெற்று தொடர்ந்து தீர்த்தோற்சவம் நடைபெறும்.

உற்சவ குரு:
சிவஸ்ரீ உருத்திரமூர்த்திக் குருக்கள் (இணுவில்)

ஆலய குரு:
பிரம்மஸ்ரீ க.இராஜேஸ்வரசர்மா

குறிப்பு: குறித்த பன்னிரெண்டு தினங்களும் அன்னதானம் நடைபெறும்

அடியார்கள் அனைவரும் வருகைதந்து முருகப்பெருமானின் திருவருளைப் பெறுமாறுஅன்புடன் அழைக்கின்றோம்.

(39392)(26-14-17) – ஆலய பரிபாலன சபையினர்.

## குயின்ஸ் அழகுக்கலை பயிற்சி நிலையம்

அழகுக்கலை ஆசிரியர் செல்வி ப.குயின்ரா அவர்களால் நடத்தப்படும் மகளிருக்கான அழகுக்கலை பயிற்சிநெறிகள் ஆரம்பமாகின்றன. கொழும்பில் கூடிய கட்டணத்துடன் பயிலும் பயிற்சி நெறிகளைக் குறைந்த கட்டணத்துடன் யாழ்ப்பாணத் தில் பயில ஓர் அரிய சந்தர்ப்பம். (குறுங்காலப் பயிற்சிநெறி) பயிற்சி முடிவில் தகுதிவாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும். மாணவர்களின் வசதிக்கேற்ப விரும்பிய நேரத்தில் பயிற்சி கள் நடைபெறும். பாடக்குறிப்புகளும் செயல்முறை விளக்கமும் கொடுக்கப்படும்.

**ஆரம்பம்: 10-09-2005**

பின்வரும் பயிற்சிநெறிகள் ஆரம்பமாகின்றன

01. தையல் - 3 மாதங்கள்
02. ஐசிங் - 2 மாதங்கள்
03. சிகையலங்காரம் - ஒரு மாதம்
04. மணப்பெண் அலங்காரம் - 4 நாள்கள்
05. முக ஒப்பனை (பேசியல்) - 7 வாரங்கள்
06. சாறி வேலைப்பாடு - ஒரு மாதம்
07. பெயின்ரிங் - ஒரு மாதம்
08. பொட் பெயின்ரிங் - 15 நாள்கள்
09. செயற்கை, இயற்கை மலர் தயாரிப்பு - 5 நாள்கள்
10. பூ வேலைப்பாடுகள் - ஒரு மாதம்
11. சாறி பிளவுஸ் கட்டிங் 10 நாள்கள்
12. கிறிஸ்ரல் கல் வேலைப்பாடு - 10 நாள்கள்
13. முத்து ஆபரண வேலைப்பாடு - ஒரு மாதம்
14. கை வேலைகள் - 2 மாதங்கள்
15. சிகை வடிவமைப்பு - ஒரு வாரம்

மேலதிக விவரங்களுக்கு: செல்வி ப. குயின்ரா
167, குறுசோ வீதி (மரியன்னை பேராலயம் பின்னால்),
யாழ்ப்பாணம்
T.P.: 077 - 6159468, 0777 3301000

காலை 9.00 - மாலை 6.00 மணி வரை நிலையத்தில் நேரில் அறியலாம்
மணப்பெண் அலங்காரம், பேசியல், ஐசிங், தையல், சாறி வேலைப்பாடு, சகலவிதமான ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(39399)(26-14-17)

## கண்ணீர் அஞ்சலி



மூதறிஞர் க.சிவராமலிங்கம்பிள்ளை

அவர்கள் எமது நிலையத்தின் பரீட்சைக் காலங்களில் ஆற்றிய பணி அரும்பணியாகும். அவரது இழப்பு எமக்குப் பேரிழப்பாகும். அன் னாரின் ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ காமாட்சி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம். (39388)(26-14-17)

– ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையம்.

## இதய அஞ்சலி



திருஞானம் திருலிங்கநாதன்
*(ஓய்வுபெற்ற நிர்வாக சேவை அதிகாரி)*

எமைப் பாசமுடன் தூக்கி வளர்த்த உத்தமா! அன்புக்கு வழிகாட்டி உயர்பண்புக்கு பாதைய மைத்துக் கொடுத்து எம் மூச்சில் கலந்து விட்ட வனே! உன் பிரிவுச் செய்தி கேட்டு துயரடை கிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

கண்ணன்லொட்ஜ்,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி. (39401)(46-14-17-26)

திரு.திருமதி
**T.வைத்திலிங்கம்.**

## 41 குடும்பங்களுக்கு மலசலகூடம்

நவாலி,ஓக.29

சிறுவர் பாது காப்பு நிதியம், ஆனைக் கோட்டை கிராம சேவையா ளர் பிரிவில் மல சல கூடமில்லாத 41 குடும்பத்தின ருக்கு மலசல கூடங் களை அமைத்துக் கொடுக்க முன்வந் துள்ளது. (எ-100)

## பரிசுத்த ஆவிக்குரிய செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் 'பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே, என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உறுதுணையான உமக்கு, இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் அக்காரணம் கொண்டும் உம்மில் இருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் எமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டு கின்றேன்.

உங்கள் தேவை எவ்வளவு கடினமாக இருப்பினும் அடுத்தடுத்த 8 நாள்களுக்கு இச்செபத்தை உங்கள் தேவையைக் கேளாமல் சொல்லிவரின் உங்கள் தேவை நிறைவேறும்.

*ஓம் பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி!*

(39376)(46-14-17-26) - ஓர் அடியாள்.

## நல்லை ஆதீனத்தில் இன்று நிகழ்ச்சி

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் மாநகராட்சிமன்ற இசைக் குழுவின் சிறப்பு இசை நிகழ்ச்சி இடம்பெறும்.

இன்று இடம்பெறும் நல்லைக் குமரன் மலர் 13 ஆவது இதழ் வெளியீட்டையொட்டி இந்தச் சிறப்பு இசை நிகழ்ச்சி நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (எ-111)

## பணிநிலை வேண்டுகை

கிளிநொச்சியில் அமைந்துள்ள கே.பி.கே. தனியார் நிறுவ னத்தில் கடமையாற்றுவதற்காகக் கீழ்குறிப்பிடும் பணிநிலைக் கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

01. கட்டட பொறியியலாளர்
02. தொழில்நுட்ப உத்தியோகத்தர்

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். அடிப்படை வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும். ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

தகைமையுடையோர் நேரடியாகவோ தபால் மூலமாகவோ கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

பணிப்பாளர்,
கே.பி.கே. ஒப்பந்தகாரர் நிறுவனம் (தனியார்),
பசுந்தவு அரைக்கும் ஆலை,
இரத்தினபுரம், கிளிநொச்சி.

(39358)(26-14-17)

## கண்ணீர் அஞ்சலி

**சின்னப்பு பாலசிங்கம்** (திக்கம்)

எமது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தி யோகத்தராகக் கடமையாற்றும் பாலசிங்கம் தனேஸ்குமார் அவர் களின் அன்புத் தந்தை *சின்னப்பு பாலசிங்கம்* அவர்களின் மரணச் செய்தி அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தின ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வது டன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

பிரதேச செயலகம், வடமராட்சி வடக்கு,
பருத்தித்துறை. (39358)(26-14-17)

பிரதேச செயலரும்,
நலன்புரிச் சங்க உத்தியோகத்தர்களும்,
ஊழியர்களும்.

## நான்காம் ஆண்டு நீங்காத நினைவில்...

ஏழாலையில் 18 - 12 - 1951



லண்டனில் 27 - 08 - 2001

### அமரர் சின்னத்துரை திருச்செல்வம்
**(சந்திரன்)**

*திதி 29.08.2005*

ஏழாலை மத்தி, ஏழாலை

*படைப்பதும் பறிப்பதும் அவன் செயல்*
*அழைத்தவன் குரல் கேட்டோ பற்றினாய் அவன் பாதம்*
*உன்கரம் பற்றிய நாள் முதலாய் - நிழல்*
*போல் வந்தவளை நீ மறந்து*
*உன் உதிரத்தில் வந்த முத்துக்களை - நீ மறந்து*
*போனாயே பரமனிடம் எம்மை மறந்து*
*கண்ணுக்குள் உம் விம்பம் அழியவில்லை*
*கண்ணீரால் கரைகின்றோம் அதுவும் முடியவில்லை*
*இங்கு ஏங்கி நிற்கின்றோம் உம்மை இழந்து*

த.முகவரி:
வள்ளுவர்புரம்,
விஸ்வமடு.
(39341)(26-14-17)

*பிரிவால்துயருறும்*
*மனைவி*-வவா
*பிள்ளைகள்* - வேந்தன்,
அரசி, ஆயவன், யாதவன், கேசவன்
*மருமகன்* -பகீரதன்.

## மரண அறிவித்தல்

### ஞானமுத்து ஜேம்ஸ்



அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் இல.4, குருசோ வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவரும் கனடாவைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட ஞானமுத்து ஜேம்ஸ் (முன்னாள் இ.போ.ச.-சாரதி) அவர்கள் 25.08.2005 வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானமுத்து - எலிச பெத் தம்பதியினரின் புத்திரனும் இராசையா-நாகம்மாவின் மருமகனும் திருமதி ஜேம்ஸ் பத்மாவதியின் ( கனடா) அன்புக் கணவரும் யூலியஸ் ரெரன்ஸ் (டினா-கனடா), யூலியஸ் ஜெயானி இலங்கேஸ்வரன் (விஜி - கனடா), யூலியஸ் யூட் (யூட் - கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஞான முத்து மரியநாயகம் (கனடா), திருமதி ஸ்ரனிஸ்லஸ் திரேசம்மா (கனடா), ஞானமுத்து செபஸ்தியாம்பிள்ளை (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இலங்கேஸ்வரன் (கனடா), மோகனா ரெரன்ஸ் (கனடா), உகிந்தா யூட் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஐசாக் (கனடா), ஜோசுவா (கனடா), ஆரோன் (கனடா), ஆரபி (கனடா), றேச்சல் (கனடா) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (29.08.2005) திங்கட் கிழமை பி.ப.3 மணிக்கு இல.4, குருசோ வீதி, யாழ்ப்பாணத் திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத் திற்காக கானான் சேமக்காலை, ராஜபாத வீதி, கோப்பாய்க்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.4, குருசோ வீதி,*
*சுண்டிக்குளி,*
*யாழ்ப்பாணம்.*

(38961) (39-14-17-26)

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

## விற்பனைக்கு

- தனிக் கட்டில்கள் (8 × 6)
- ஸ்பொன்ஸ் மெத்தை (8 × 6)
- டபிள் கட்டில்கள் (4½ × 6)
- சோபா செட்டிகள் (15,000/=, 20,000/=, 25,000/=)
- ஸ்ரீல் பீரில் கபிநெற்
- நகை செய்பவர்களுக்கு ஏற்ற பட்டறை
- மைபினர் கார் கியர் பொக்ஸ்
- மைபினர் கார் கரியல்
- கங்கர்
- எலக்ரிக் மோட்டார் (புதியது,பழையது)
- மின்விசிறி
- கம்பஸ் கட்டில்

தொடர்பு:- த.குமாரசாமி
352,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(39387)(14)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் எமது சக ஊழியரான சி.நகுலேந்திரன் அவர்களின் தந்தையான

**வயிரவப்பிள்ளை சின்னையா**

அவர்களின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

தங்கள் சக ஊழியர் (99)
யாழ்.போதனா வைத்தியசாலை

(39395)(14)

## கண்ணீர் அஞ்சலி

*எமது வித்தியாலய ஆசிரியை*
*செல்வி வா.கமலேஸ்வரி (சாந்தி)*
*அவர்களின் அன்புத் தந்தை*


**ப.வாரித்தம்பி**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய கழகம்.
யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்

(39383)(14)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சுப்பிரமணியம் நடனலட்சுமி**

*(அரியாலை கனகரட்ணம் வீதி)*

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
| --- | --- |
| 12-11-1928 | 29-08-2002 |

**கனகரட்ணம் வீதியைப் பிறப்பிடமாகவும் லண்டன் வெம்பிளி வீதியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்தீர்களம்மா. அன்புக்கோர் ஊற்றே! அறம்பார்த்த அன்னையே! ஆண்டுகள் மூன்றாக உருண்டோடிச் சென்றாலும் மாறாத நினைவோடு வாழுகிறோம் தாயே! போகும் இடமெல்லாம் உன்முகம் அம்மா அம்மா என்று இனியாரைச் சொல்வது...**

உன் பிரிவால் துடிக்கும்:
**மகன்மாரும், சகோதரிகளும்**

தகவல்:
ரவிந்திரநாதன்(மகன்),
இலங்கை மின்சார சபை,
யாழ்ப்பாணம்.

22/5, பாரதியார்லேன்,
கச்சேரி நல்லூர் றோட்,
சுண்டுக்குளி.

(39410)(14)

## சக்தி TV, சக்தி FM இன் 7வது பிறந்தநாள் கொண்டாட்டம் 2005

யாழ். மாவட்டத்திற்கான மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி

### போட்டி நிபந்தனைகள்:

- ✓ போட்டியானது ஆண்/பெண் இரு பாலாருக்குமானதாகும்.
- ✓ மேற்படி போட்டிகளில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வீர/வீராங்கனைகள் மாத்திரமே பங்குபற்ற முடியும்.
- ✓ 15 வயதிற்கு மேற்பட்டோர் மாத்திரமே கலந்துகொள்ளமுடியும்.
- ✓ இவ்விண்ணப்பப்படிவத்துடன் கட்டாயமாக உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டை நகல் பிரதி ஒன்றையும் இணைத்து 05.09.2005 க்கு முன்னதாக கிடைக்கக்கூடிய வாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**சக்தி TV, சக்தி FM சைக்கிள் ஓட்டப்போட்டி**
**C/o உதயன்**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

✂ - - - - - - - - - - - - - - - - - -

### விண்ணப்பப்படிவம்

முழுப்பெயர் :................................
2. விலாசம் :................................
3. பிறந்த திகதி :................................
4. தொலைபேசி இல :................................
5. தேசிய அ.அட்டை இல :................................
6. பால் :................................

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கமையவும், நடுவர்களின் தீர்ப்புகளிற்கும் ஏற்பாட்டாளர்களின் நிபந்தனைகளுக்கு அமையவும் இப் போட்டியில் கலந்துகொள்கிறேன் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

.............. ..............
திகதி கையொப்பம்

## சம்பள நிலுவை கிடைக்கும்

யாழ்ப்பாணம்,ஓக.29

வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்கள் உட்பட சகலரின் சம்பள நிலுவைக் கொடுப்பனவுகள் இம் மாதத்தில் வழங்கப்படவுள்ளன.

வலயக் கல்விப் பணிப்பாளர்களினால் கோரப்பட்ட சம்பள நிலுவைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் வடக்கு-கிழக்கு மாகாணத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள 24 கல்வி அலுவலகங்களுக்கும் இவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (எ-152)

## சட்டவிரோத மணல் அகழ்வு

நவாலி,ஓக.29

கல்லுண்டாய் கடற்கரைப் பிரதேசத்தில் அனுமதியின்றி மணல் அகழ்வதால் கடல் நீர் வயல் நிலங்களுக்குள் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையில், மணல் அகழ்பவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால், சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகம் ஊடாகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் ச.சந்திரராசா தெரிவித்தார். (எ-100)

## கியூடெக்கின் கண்காட்சி

வலிகாமம் தெற்கு,ஓக.29

கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தினர் அடுத்தமாதம் முதலாம் திகதியில் இருந்து ஒருவாரத்திற்கு கண்காட்சி ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளனர்.

இக்கண்காட்சி, மேற்படி நிறுவனம் எதிர்காலத்தில் முன்னெடுக்கவுள்ள செயற்பாடுகள், நிறுவனத்தின் உதவியுடன் நடத்தப்படுகின்ற சிறுகைத்தொழிற் பொருள்கள், கிராம ரீதியான அபிவிருத்திச் செயற்பாடுகள் போன்ற பல்வேறு பகுதிகளை உள்ளடக்கியதாக அமையும் எனத் தெரிவிக்கப்பட்டது.

வலிகாமம், யாழ்ப்பாணம், தீவகம் வடமராட்சி தென்மராட்சி ஆகிய பிரதேசங்களில் மேற்படி கண்காட்சி ஒருவாரமாக நடத்தப்படும் என் நிறுவன இயக்குநர் சி.கே.ஜெயக்குமார் அடிகளார் அறிவித்துள்ளார். (எ-152)

## நெடுந்தீவு அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

நல்லூர்,ஓக.29

நெடுந்தீவு பிரதேச சபையின் வேலைத் திட்டங்களுக்கென இந்த ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்டத்தில் ரூபா 5 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நெடுந்தீவு மத்தி மாதிரி முன்பள்ளி அமைப்புக்கு ரூபா ஒரு லட்சத்து 50 ஆயிரமும், குடிதண்ணீருக்கான குழாய்க்கிணறுக்கு ரூபா 50 ஆயிரமும், காளாமுனை கிராமத்தில் குடிதண்ணீர்த் தொட்டி அமைக்க ரூபா ஒரு லட்சமும், நெடுந்தீவு பொது நூலகத் திருத்த வேலைகளுக்கு ரூபா 50 ஆயிரமும் சென். ஜேம்ஸ் பாலர் பாடசாலைக்கு ரூபா ஒரு லட்சமும் ஐக்கிய தீபம் சனசமூக நிலையத் திருத்தவேலைகளுக்கென ரூபா 50 ஆயிரமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. (எ-111)

## அரியாலை விவசாயிகளுக்கு விசேட அடையாள அட்டை

யாழ்ப்பாணம்,ஓக.29

அரியாலை உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள ஈச்சங்காடு, கொட்டுக்கிணற்றடி ஆகிய பகுதிகளில் நெற்செய்கை மேற்கொள்ளவுள்ளவர்களுக்கு விசேட அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது.

இதற்கிடையில், நாளை செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு அரியாலை ஆனந்தன் வடலி வீதியில் உள்ள நல்லூர் உப பணிமனையில் விசேட அடையாள அட்டைக்கான புகைப்படம் பிடிக்கப்படவுள்ளது என்றும்-

ஏற்கனவேபதிவு செய்தவர்கள் உட்பட எதிர்காலத்தில் அப்பகுதியில் விவசாயம் செய்யவுள்ளவர்களும் குறிப்பிட்ட தினத்தில் வந்து புகைப்படம் பிடித்துக் கொள்ளலாம் என்று அரியாலை விவசாயச் சம்மேளனத்தினர் அறிவித்துள்ளனர். (எ-86-190)


HP New Arrivals

Laser Jet
1020
Simple, Compact, Affordable.

print up to 14ppm(A4)
1200 x 1200 dpi
2MB RAM / USB / Host-based printing

All in one
3015
Simple, Compact and all in one

Print(14ppm-A4)
Scan(24bit, 600x600 dpi),
Copy(14 A4)
Fax(3 sec/page)
32MB RAM
USB & parallel

DeskJet
3845
Simple, Compact, Affordable.

Printers 3845
Hp Desk Jet
4800 dpi
18 PPM
6 ink colour Available
USB

1320/1320n/1320tn
Ideal for business

21ppm(A4)
1200 x 1200 dpi
16MB RAM(upgradable to 144MB/USB
Automatic 2 side printing

Scanners
2400/ 4070 To professional to desk top publishers

- 1200 dpi optical resolution
- 1200 x 1200 dpi hardware resolution
- up to 999,999 dpi enhanced resolution(Depending on computer memory disk space and other system factors)
- 48- bit colour.
- USB interface (USB compatible with USB 2.0)
Win 2000, Win XP, Win XP or Mac OS 9.1,10,10.2

HP Repairs

எம்மால் அனைத்து விதமான லேசர் மற்றும் இன்க் ஜெட் வகையான பிரிண்டர்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்
5L, 6L, 4m, 5m, 1000, 1100, 1200 1300, 1010, 1020
மற்றும் புதிய வகைகள்

- Paper jam
- paper struck
- spool problem
- Print quality
- tracing paper issues



SERVICE HOTLINE 071 444 2 555

HP Original Toner & Cartridges




எம்மிடம் அனைத்து விதமான பிரிண்டர்களுக்குமான லேசர் டோனர்களும் கலர் மற்றும் கறுப்பு காட்றிஜ்களும் உண்டு

SALES HOTLINE 0712 294 204

(c/44841)

MICRO PC SYSTEMS

| | |
| --- | --- |
| கொழும்பு - 06 | 15. 36th Lane, Colombo-06 Tel: 011-4516764 |
| கொழும்பு - 13 | 310, George R De Silva Mw, Kotahena, Tel: 011-4619673 |
| யாழ்ப்பாணம் | 175/3 Kasturiyar Rd, Jaffna. Tel: 021 2225893, 077 3126712 |
| நெல்லியடி | Main Street, (Next to Police Station) Nelliyadi. Tel: 077 3039536 |
| வவுனியா | 73C, 2nd Cross Street, Vavuniya. Tel: 024 4588339, 0777308417 |
| திருகோணமலை | 148, Main Street, Trinco. Tel: 026 222 1054, 078 8720639 |

# தேசிய மட்ட தடகளப் போட்டியில் யாழ்ப்பாணத்துக்கு இரு தங்கப் பதக்கங்கள்



எஸ்.கமலமோகன் | எம்.பிரதீப்குமார்

யாழ்ப்பாணம்,ஒக.29

மாத்தளையில் நடைபெற்று வரும் 31 ஆவது தேசிய தடகளப் போட்டிகளில் கடந்த வெள்ளிக் கிழமை நடைபெற்ற போட்டிகளில் யாழ். வீரர்கள் இருவர் முதலிடம் பெற்று தங்கப் பதக்கம் பெற்றுள்ளனர்.

ஆண்களுக்கான குண்டு போடுதல் போட்டியில் எம்.பிரதீப்குமார் 13.73 மீற்றர் தூரத்தை எறிந்து முதலாம் இடத்தையும் -

ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் எஸ்.கமலமோகன் 2.01 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து முதலாம் இடத்தையும் - பெற்று தங்கப்பதக்கங்களைத் தமதாக்கிக்கொண்டனர்.

கடந்த வருடம் நடந்த தேசியமட்டப் போட்டிகளில் கலந்துகொண்டு மூன்றாம் இடத்தைப் பிரதீப்குமார் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வருடம் போட்டிகளில் யாழ். மாவட்டத்தில் இருந்து 29 வீர, வீராங்கனைகள் பங்குபற்றுகின்றனர். (3-190)

### ஸ்கந்தா ஸ்ரார் சுற்றுப்போட்டி

# கழுகுகள் அணி 45 ஓட்டங்களால் வெற்றி

யாழ்ப்பாணம்,ஒக.29

யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறையின் ஆதரவுடன் உதயன் ஊடக அனுசரணையுடன் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழகம் அமரர் ஜெயசோதி துஷ்யந்தனின் வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கடந்த வாரம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஓர் ஆட்டத்தில் கழுகுகள் அணி 45 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

விக்ரேறியன்ஸ் வி.க. அணிக்கும், கழுகுகள் வி.க. அணிக்கும் இடையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய கழுகுகள் அணி 7 விக்கெட்டுகளை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் றூபன், சுதன், அசோக் ஆகியோர் முறையே 18,33,17 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஜெனன் 3விக்கெட்டுகளையும் பசுபதி, விபுலன் முறையே 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய விக்ரேறியன்ஸ் வி.க அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 104 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதில் பசுபதி, தாமரைச்செல்வன் ஆகியோர் முறையே 41,12 ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

சுஜீவன், கோபிநாத் ஆகியோர் முறையே மூன்று விக்கெட்டுகளையும், சுதன் இரண்டு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். (எ-190)

## இரத்தினசிங்கம் அணிவெற்றி

யாழ்ப்பாணம்,ஒக.29

நாவந்துறை புனித மரியாள் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய உள்ளூர் கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் நாவந்துறை இரத்தினசிங்கம் அணி வெற்றிபெற்றது.

இரத்தினசிங்கம் அணி எதிர்த்து விளையாடிய சோபனம் அணியை 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது.

இப்போட்டிகளினை வெளிநாடுகளில் இருந்து வருகை தந்த உறவுகள் ஏற்பாடு செய்தாக போட்டி இணைப்பாளர் நோலஸ்கே தெரிவித்தார். (3-190)

# 25 கிலோமீற்றர் சைக்கிள் ஓட்டம் பண்டத்தரிப்பு இளைஞன் முதலிடம்

யாழ்ப்பாணம்,ஒக.29

சுண்டுக்குளி கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகம் தனது 47ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நடத்திய 25 கிலோமீற்றர் சைக்கிள் ஓட்டப் போட்டியில் பண்டத்தரிப்பு இளைஞன் முதலிடம் பெற்றார்.

இக்கழகத்தினால் நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள் வருமாறு:-

✱ ஆண்களுக்கான 25 கிலோமீற்றர் சைக்கிள் ஓட்டம்.

இ.கமல்ராஜ் - பண்டத்தரிப்பு, நா.யேசுதன் - அராலி, தி.நகுலேஸ்வரன் - மானிப்பாய்.

✱ வினோத உடைப்போட்டி - யோண்சன் (குஸ்ரரோகி), கொக்மன் (வேடுவன்), டிலக்சினி (தேயிலை கொய்யும் பெண்), சிறப்புப் பரிசு - நிலக்சன் (தேவதூதன்). (3-190)




# யாழ். வீர, வீராங்கனைகளுக்கு மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி

யாழ்ப்பாணம்,ஒக.29

சக்தி ரி.வி., சக்தி எவ்.எம். இன் 7 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட ரீதியில் மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

15 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாருக்கும் நடத்தப்படும் இந்தப் போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் மட்டுமே கலந்து கொள்ள முடியும்.

போட்டிகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் விண்ணப்பப்படிவத்துடன் தேசிய அடையாள அட்டையின் நகல் பிரதி ஒன்றையும் இணைத்து எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னதாக "சக்தி ரி.வி, சக்தி எவ்.எம்., சைக்கிள் ஓட்டப்போட்டி, உதயன் , 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (3-203)

## உதயசூரியன் வி.க. வெற்றியீட்டியது

யாழ்ப்பாணம்,ஒக.29

ஊர்காவற்துறை தம்பாட்டி காந்திஜீ சனசமூக நிலையமும், காந்திஜீ விளையாட்டுக் கழகமும் இணைந்து 40ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு, மறைந்த கிராம மாவீரர்களின் நினைவாக யாழ்.மாவட்ட ரீதியிலாக நடத்திய கரப்பந்தாட்ட 'ஓவர் கேம்' சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் உதயசூரியன் வி.க. அணி வெற்றிபெற்றது.

உதயசூரியன் வி.க(எ) அணியை எதிர்த்து யாழ் வள்ளுவன் வி.க. அணி மோதியது.

உதய சூரியன் வி.க.(எ) அணி 14:13, 14:11, 14:12 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

இப் போட்டிக்கு நடுவராக எ.எவ்.செபமாலைமுத்து கடமையாற்றினர். (3-190)

## பருத்தித்துறையில் கிரிக்கெட் ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக.29

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் கழக மைதானத்தில் நடத்தும் 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்றும், நாளையும் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு,

இன்று

பிற்பகல் 3.30 மணி - மைக்கல் வி.க எதிர் கொம்மாந்துறை வி.க.

நாளை

பிற்பகல் 3.30 மணி - டயமன்ஸ் வி.க எதிர் வெக்டர் வி.க. (எ-190)

# பரந்தன் தபாலகத்துக்கு நிரந்தரக் கட்டடம் இல்லை

பரந்தன்,ஒக.29

பரந்தன் தபாலகம் சொந்தக் கட்டடமின்றி பல்வேறு வசதியீனங்களின் மத்தியில் இயங்கிவருகின்றது.

யுத்த காலத்தில் தபாலகக் கட்டடம் அழிவடைந்தது. அதனையடுத்து கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கத்திற்குச் சொந்தமான கட்டடத்தில் பல்வேறு வசதிக்குறைகள் மத்தியில் தபாலகம் இயங்கிவருகிறது. இதனால், மேற்படி பல.நோ.கூ.சங்கம் பூரணமாக மக்கள் சேவையை வழங்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து தபாலகத்திற்கு நிரந்தர கட்டடம் அமைத்துத்தரவேண்டும் என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. (எ-352-204)




# சைக்கிள்களில் நீளமான பொருள்களை ஏற்றி இடைஞ்சல் ஏற்படுத்தாதீர்கள்!

### காவல்துறையினர் வேண்டுகோள்

கிளிநொச்சி, ஒக.29

சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் நீளமான பொருள்களை வீதிகளில் எடுத்துச் செல்வதற்குத் தமிழீழ காவல் துறையின் நகரப் போக்குவரத்துப் பிரிவினர் தடை விதித்துள்ளனர்.

சைக்கிள், மோட்டார் சைக்கிள்களில் நீளமான பொருள்களை எடுத்துச் செல்லும் போது வீதியில் பெரும் நெருக்கடி நிலைமை ஏற்படுகின்றது.

இதனால், பாதசாரிகள் முதல் வாகன சாரதிகள் வரை அனைவரும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுவருகின்றனர்.

இதனால், வீதிவிபத்துகள் ஏற்படக் கூடிய அபாய நிலைமையும் ஏற்பட்டுள்ளது. எனவே, வீதி விபத்துகள் ஏற்படுவதைத் தடுத்துநிறுத்தவும் அதனால் பொதுமக்களுக்கு ஏற்படக் கூடிய அசௌகரியங்களை நீக்கும்வகையிலும் தமிழீழ போக்குவரத்துப் பிரிவினர் இந்த நடவடிக்கையைக் கொண்டு வந்துள்ளனர்.

சைக்கிள், மோட்டார் சைக்கிள்களில் நீளமான பொருள்களை எடுத்துச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும்-

இதனை மீறிச் செயற்படுபவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தமிழீழ காவல் துறையின் நகரப் போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பாளர் ப.சி.சிவகுமாரன் தெரிவித்துள்ளார். (ஐ-203)

## பனை மீள் நடுகைக்கு நிதி ஒதுக்கீடு இல்லை

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் யுத்தகாலத்தில் அழிக்கப்பட்ட பனை மரங்களை மீள் நடுகை செய்ய உரிய திணைக்களம் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பனை எமது தேசியத்தின் சொத்து. இதனைக் காப்பாற்ற மீள்நடுகை அவசியம் இதற்கு பனை அபிவிருத்தி சபை மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவி செய்ய வேண்டும்- என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில்-

பனை வளத்தைப் பெருக்க பனம் விதையை மீள் நடுகை செய்யப்படவேண்டும் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மக்களிடம் வேண்டுகோள்விடுத்துள்ளது. (எ-352-204)

# செம்மலை, நாயாறு பகுதியில் 360 பேருக்கு சைக்கிள்கள்



அளம்பில்,ஒக.29

சமூகப் பொருளாதாரச் சூழல் அபிவிருத்தியாளர் நிறுவனம் (சீட்), செம்மலை, நாயாறுப் பகுதிகளைச் சேர்ந்த 125 குடும்பங்களுக்கு அண்மையில் 360 சைக்கிள்களை அன்பளிப்பாக வழங்கியது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவித்திட்டத்தின் கீழ் இந்த சைக்கிள்கள் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

'சீட்' நிறுவனத்தினால் செம்மலையில் குடியமர்த்தப்பட்ட 300 குடியிருப்பாளர்களுக்கும் -

நாயாறுப் பகுதியில் குடியமர்த்தப்பட்ட 60 குடியிருப்பாளர்களுக்கும் இவ்வாறு சைக்கள்கள் வழங்கப்பட்டன.

இதுதொடர்பாக நடைபெற்ற நிகழ்வில் நாயாறு கிராம அலுவலர் திருமதி வி.அமிர்தருஜினி, செம்மலை கிராம உத்தியோகத்தர் வி.புஸ்ராஜா, கடற்புலி பிரதேச அரசியல் பொறுப்பாளர் த.அரவிந்தன், 'சீட்' நிறுவனத் திட்டப்பணிப்பாளர் ச.நிதர்சன் மற்றும் ஊரவை மேம்பாட்டுக் குழுவின் பிரதிநிதி கள் கலந்துகொண்டனர். (எ-416)

# முல்லைத்தீவு வலயக்கல்வி அலுவலகம் புதுக்குடியிருப்பு வித்தியாலயத்துக்கு மாற்றம்

புதுக்குடியிருப்பு,ஒக.29

முல்லைத்தீவு வலயக் கல்விப்பணிமனை புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரிக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலையில் இயங்கி வந்த வலயக்கல்வி அலுவலகம், தற்போது புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின்போது வலயக்கல்வி அலுவலகத்திற்குள் வெள்ளம் புகுந்தமையால் கணனி உட்படப் பல பெறுமதியான பொருள்கள் அழிவடைந்தன.

அதனை அடுத்து கடந்த டிசெம்பரில் நிதிக்கிளை, திட்டமிடற்கிளை மற்றும் பாடசாலை சேவைப்பகுதி என்பன உடனடியாக புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கு மாற்றப்பட்டிருந்தன. தற்போது ஏனைய கிளைகளும் முழுமையாக மாற்றப்பட்டுவிட்டன.

இதேவேளை - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் இயங்கிவந்த முல்லைத்தீவு மாவட்டக் கல்விக் கழகம், புதுக்குடியிருப்பு கோட்ட கல்வி அலுவலகம், முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ நுண்கலைக்கல்லூரி என்பன புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிர மணிய வித்தியாசாலைக்கு மாற்றப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் ஆசிரியர்கள் தமது தேவைக்காக நிர்வாகக் கிளைக்கும் நிதிக் கிளைக்கும் மாறிமாறிச் சென்று தமது தேவைகளை பூர்த்தி செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர் என்றும்-

தற்போது அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது என்றும்- தெரிவிக்கப்பட்டது. (எ-353-203)

ராஜா யாழ்ப்பாணம்
சியாம், அஸின், பூஜா,
லைலா நடித்த
உள்ளம் கேட்குமே
காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பு.நே.)
(சி-43380)

மனோகரா யாழ்ப்பாணம்
புரட்சிக்கலைஞர் விஜயகாந்த், ரம்யாகிருஸ்ணன், சாக்ஷி, பிரகாஷ்ராஜ் நடித்த
வாஞ்சிநாதன் (சிலதினங்கள் மட்டும்)
காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30.
அடுத்த வெளியீடு: ஜெயம் ரவி, ரேணுகா மேனன் நடித்த
தாஸ்
(சி-44110)

நாதன்ஸ் சினிமா
சத்தியராஜ், நமிதா, வடிவேலுவின்
நகைச்சுவைச் சித்திரம்
இங்கிலீஸ்காரன்
கா.நே.: 10.30,2.30,6.30,9.30. (பு.நே.)
(சி-43363)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின
அதிரடி வெளியீடாக இளம் புயல் ஜெயம் ரவி,
ரேணுகா மேனன், வடிவேல் மற்றும் பலர் நடித்த
தாஸ் (சில்லம்) (கடைசி வாரம்)
அடுத்த வெளியீடு
கஜனி
காட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே).

## இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி



### அமரர் சதாசிவம் சொக்கலிங்கம்

தோற்றம் 11 - 08 - 1926 மறைவு 22 - 08 - 2003

எமக்கு ஒளிவிளக்காய் திகழ்ந்து எம்மை உயர்வடையச் செய்த அன்புத் தெய்வம் அமரத்துவம் அடைந்து இரண்டாண்டுகள் நிறைவுபெற்றுள்ள வேளை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்துகின்றோம்.

96, இராஜேஸ்வரி வீதி,
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.
(39427) (18-13-33)

## மரண அறிவித்தல்கள்



### செல்வன் பாலகிருஸ்ணன் பால்ராஜ் (ராஜன்)

தொண்டைமானாறு, செல்வச்சந்நிதி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி அத்துளு அம்மன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் பாலகிருஸ்ணன் பால்ராஜ் (ராஜன்) அவர்கள் 26.08.2005 வெள்ளிக்கிழமையன்று கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர் சிவானந்த ஐயர் இராசலஷ்மி, கந்தசாமி துரை, சந்திரகாந்தி அம்மா ஆகியோரின் பேரனும் பாலகிருஷ்ணன் (ரவி வல்வெட்டித்துறை), செல்வராணி அவர்களின் அன்பு மகனும் கஜன், அனுசியா, சிந்துஜன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2005) திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கரவெட்டி வேரொண்டை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*தற்போதைய முகவரி:-*
*அத்துளு அம்மன் கோயிலடி,*
*கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.*
(39431) (18-13-33)
தகவல்:-
பாலகிருஷ்ணன் (ரவி),
தந்தை.



### நாகலிங்கம் வினாசித்தம்பி

அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும் 308, புதிய புன்னை நீராவி, விசுவமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் வினாசித்தம்பி (சின்னம்மான்) நேற்று (28.08.2005) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2005) திங்கட்கிழமை நாகம்மாள் கோயிலடி, அராலி மத்தி, வட்டுக்கோட்டையில் மருமகள் நாகேஸ்வரியின் இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக பூனாவடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாகம்மாள் கோயிலடி,*
*அராலி மத்தி,*
*வட்டுக்கோட்டை.* (39425) (18-13-33)
தகவல்:-
சுகுமார் (மகன்).

### பொன்னையா கிருபானந்ததேவன்



கரவெட்டி, கலட்டியைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் (பாசில் சிற்றியை) வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா கிருபானந்ததேவன் (குஞ்சு) 14.08.2005 ஞாயிற்றுக்கிழமை சுவிஸ் (பாசில் சிற்றி)யில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - மீனாட்சி தம்பதியரின் மகனும் இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும் முரளிதரன் (ராஜலக்சுமி மல்ரி பலேஸ், நெல்லியடி), மீரா (பிரான்ஸ்), றேகா (வாழ்வகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயக்குமார் (பிரான்ஸ்), ஜெனிற்றா ஆகியோரின் அன்பு மாமனாரும் மற்றும் ஜெயபிரவின் (பிரான்ஸ்), அபிஷா (பிரான்ஸ்), ஆரோன் ஆகியோரின் அன்புப் பேரனும் மகாதேவன் (கொழும்பு) காலஞ்சென்ற மெய்கண்டதேவன் மற்றும் சதிர்முகதேவன் (சுவீடன்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிஸ் (பாசில் சிற்றி)யில் இன்று (29.08.2005)திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் (இ.நே.) நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கரணவாய் கிழக்கு,*
*கரவெட்டி.*
(39429) (18-13-33)
தகவல்:-
முரளி (மகன்)

### மயில்வாகனம் சிவபாக்கியம்



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி கிழக்கு முடமாவடியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மயில்வாகனம் சிவபாக்கியம் அவர்கள் நேற்று (28.08.2005) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை மயில்வாகனம் அவர்களின் அன்பு மனைவியும் வேதநாயகி, லோகநாயகி, தேவநாதன், தேவநாயகி, கலாநாயகி, பிறையணிநாதன், குருபரநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சண்முகலிங்கம் (ஓய்வுபெற்ற நில அளவையாளர்), இரட்ணலிங்கம் (மிக் இன்டஸ்ரீஸ்), விஜயலட்சுமி, காலஞ்சென்ற விமலேந்திரன் (சரஸ்வதி மில்), பாலேந்திரன் (சவூதி), மகிழம்மா ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை, தம்பித்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சந்திரமோகன் (மேஜர் கண்ணன்), சுஜாத்தா (2ஆம் லெப்டினன், குகதா) மற்றும் ரதி மோகன், கஜன் (யாழ். இந்துக் கல்லூரி A/L), தர்சிகா (யாழ். இந்து மகளிர் கல்லூரி A/L), தணிகைவாசன் (யாழ். இந்துக் கல்லூரி, ஆண்டு 10), கஜஸ்திகன் (யாழ். மத்திய கல்லூரி, ஆண்டு 8), சிவஸ்திகா (யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி, ஆண்டு 7), நிருத்திகா (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை, ஆண்டு 4), வேணிஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2005) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராமலிங்கம் வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.*
(39420) (18-13-33)
தகவல்:-
மக்கள், மருமக்கள்.

## உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு
## வடக்கு - கிழக்கு மாகாண சபை
## வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டம் (நிகொட் - விஸ்தரிப்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
"ஆஅவ"கடன் இல. 2084 - SRI (SF)

## கேள்வி கோரல் - இல.09
## குடிசார் வேலைகளைப் பெறுதல்

1. வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் (NECORD) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆஅவ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னகத்து தொழில்தருணராக குறிப்பிடப்படும் (NECORD), திட்டப் பணிப்பாளர் சார்பாக முல்லைத்தீவு மாவட்ட கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலைப் பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01. | MU/NECORD-Ext/ID/01 | முல்லைத்தீவு 'நிகொட்' அலுவலர்களுக்கான சுற்றுலா விடுதி அமைத்தல். | M6 | 66,000 |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.
   - I. நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்திசெய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித் துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   - II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (NCCASL) உறுப்பினராக (ICTAD உடன் மேற்படி M7 இற்கு மேல் பதிவுசெய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.
   - III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். அல்லது 01.07.2003 இற்கு பின் பதிவுசெய்யப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒப்பந்தகாரர் திருப்திகரமான ஒத்ததன்மையினாலான வேலைகளை ஒப்பந்தகாரர்களாகவோ அல்லது உப ஒப்பந்தகாரர்களாகவோ செய்திருத்தல் வேண்டும். முழு வேலைகளும் வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்படவேண்டும்.
   - IV. ICTAD வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.
   - V. மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.
   - VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்கவேண்டும்.
   - VII. கேள்வி கோருவோர் பெறுமதிசேர் வரி (VAT) பதிவுச் சான்றிதழின் நிழற்பிரதியை அல்லது நிறுவனம் பதிவுசெய்யப்படாத சந்தர்ப்பத்தில் பெறுமதிசேர் வரியில் இருந்து விலக்களிக்கப்பட்டதாக உள்நாட்டு இறைவரி ஆணையாளரிடமிருந்து உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தை 'B' கடித உறையுடன் சமர்ப்பிக்கப்படும் ஏனைய ஆவணங்களுடன் சேர்த்து சமர்ப்பித்தல் வேண்டும்.
4. மேற்குறிப்பிட்ட அட்டவணையில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் கேள்வி கோரமுடியும். ஏதாவது ஒப்பந்தகாரர்களுக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் (NECORD) வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது. 01.07.2003இற்குப் பின் பதிவுசெய்யப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒப்பந்தகாரர்கள் ஒத்ததன்மையிலான வேலைகளை ஒப்பந்தகாரர்களாகவோ அல்லது உப ஒப்பந்தகாரர்களாகவோ முடித்திருந்தால் எந்த ஒரு நேரத்திலும் ஏதாவது ஒப்பந்தகாரர்களுக்கு NECORD திட்டத்தில் அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை ஒன்று ஆகும்.
5. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலும் தகவலை மாவட்ட பிரதிக் கருத்திட்டப் பணிப்பாளர், அலுவலகம், NECORD, முல்லைத்தீவில் பெற்றுக்கொள்ளலாம்.
6. ஒப்பந்த ஆவணங்களை 2005 செப்ரெம்பர் 5ஆம் திகதியிலிருந்து 2005 செப்ரெம்பர் 14ஆம் திகதிவரை முற்பகல் 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து, மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
7. முன்கூட்டியே ஒப்பந்தக் கூட்டமொன்று, இதன் முல்லைத்தீவு (NECORD) அலுவலகத்தில் 2005 செப்ரெம்பர் 19 முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும்.
8. கேள்வி முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், பொறிவைக்கப்பட்ட இரு உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்கவேண்டும். அத்துடன், அது 9ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட திகதியில், இடத்தில் விநியோகிக்கப்படல் வேண்டும்.
9. அவ்வவ் வேலைகளுக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள், தலைவர், மாவட்ட கேள்விச்சபை, NECORD, மாவட்ட கருத்திட்ட அலுவலகம், கச்சேரி, முல்லைத்தீவிற்கு 2005 செப்ரெம்பர் 21 முற்பகல் 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்க அனுப்பப்படவேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும் . கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

திருமதி இமெல்டா சுகுமார்,
தலைவர்,
மாவட்ட கேள்விச்சபை/அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

சி.இரகுநாதபிள்ளை
மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர்,
நிகொட் , முல்லைத்தீவு.

(சி-44845) (18-13-33)

# சந்திரிகாவுக்கு வழங்கப்படவுள்ள காணியை சுற்றி பாதுகாப்பு வலயம்

கொழும்பு, ஒக. 29

பதவியை விட்டு விலகிச்செல்லும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு இலவசமாக ஒன்றரை ஏக்கர் காணியை. வழங்க அமைச்சரவை முடிவு செய்திருப்பதற்கு மேலதிகமாகவும் மாதிவலவில் ஜனாதிபதிக்குக் காணி கிடைக்கவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவருக்கு கிடைக்கவுள்ள காணியைச் சுற்றிவரவுள்ள பத்து ஏக்கர் காணியும் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப் படவுள்ளது எனவும் கூறப்படுகிறது. இதனால் அப்பகுதியில் கட்டுப்பாடுகளும், தடைகளும் விதிக்கப்படும் எனவும் இதனால் கெடுபிடிகள் இப்பகுதியில் இடம்பெறலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் காணி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது பதவியிலிருந்து ஓய்வு பெற்றதும் குடியிருப்பதற்காக அவருக்கு வழங்கப்படவுள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதிக்கு அருகில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு வழங்கப்படவுள்ள இந்தக் காணியின் பெறுமதி 10 கோடி ரூபாவாகும்.

ஜனாதிபதித் தேர்தல் இந்த வருடமே நடைபெறும் என உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய பின்னரே ஜனாதிபதிக்குரிய காணி அன்பளிப்புச் செய்யும் விவரம் வெளிவந்தது. அது தொடர்பில் நகர அபிவிருத்திப் பிரதி அமைச்சரோ, அவ்வமைச்சின் செயலாளரோ எதுவும் அறிந்திருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இக்காணியில் அமையவுள்ள நிர்மாண வேலை ஜனாதிபதியின் சொந்தச் செலவிலேயே இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## தமிழகத்தில் கடல் உள்வாங்கியது

சென்னை, ஒக.29

தமிழகத்தில் சென்னை மரீனா கடற்கரை மற்றும் பட்டினப்பாக்கம் ஆகிய பகுதிகளில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் திடீரென்று கரையில் இருந்து கடல் சுமார் 20 அடிகள் தூரம் உள்வாங்கியது. இதனால் மீண்டும் ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழக் கூடும் என்று அச்சம் எழுந்தது. ஆனால், சிறிது நேரத்தின் பின் கடல் முந்தைய நிலைக்குத் திரும்பியது.

நேற்று காலை அந்தமான்,நிக்கோபார் தீவுப் பகுதிகளில் 5.5 ரிச்டர் அளவில் நில நடுக்கம் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-12)

## நிபந்தனைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களில் எவருக்கும் ஆதரவு வழங்கமாட்டார்கள் என்றே தெரியவருகிறது. அப்படி ஒருநிலை ஏற்பட்டால் தமது கட்சி சார்பில் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது குறித்து அந்தக் கட்சி தீவிரமாகப் பரிசீலித்துவருகின்றது. (க)

## இரத்மலானையில் தேடுதல் வேட்டை

கொழும்பு, ஒக.29

இரத்மலானை விமான நிலையம் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படலாம் என்ற இராணுவப் புலனாய்வுத் தகவலையடுத்து பொலீஸாரும், விமானப் படையினரும் இணைந்து விமான நிலையம் அமைந்துள்ள பகுதியைச் சூழவுள்ள இடங்களில் தேடுதல் வேட்டைகளை நடத்தியுள்ளனர்.

வார இறுதி நாள்களில் நடந்த இந்தக் கூட்டுத் தேடுதலின்போது பலர் விசாரணைக்காக அழைத்துச்செல்லப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இதேபோன்று இப்பகுதியில் மேலும் தீவிர தேடுதல் வேட்டைகள் நடைபெறும் என்று கல்கிஸைப் பொலீஸ் அத்தியட்சகர் அரசரத்தினம் தெரிவித்தார். (க)

## ஹெல உறுமய..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்திருக்கிறது.

இவ்வாறான சூழ்நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கு ஜே.வி.பி. கடும் எதிர்ப்பினை வெளிப் படுத்தியுள்ளதாகவும் தெரிகிறது.

ஜே.வி.பியின் கொள்கைகளுக்கும் ஜாதிக ஹெல உறுமயவின் கொள்கைகளுக்கும் இடையே பெரும் வித்தியாசம் இருப்பதாலும் -

ஜாதிக ஹெல உறுமயவிற்கு இருந்த மக்கள் ஆதரவு குறைந்திருப்பதாலும் - தமது கட்சி இவ்வாறான எதிர்ப்பை வெளியிட்டிருப்பதாக ஜே.வி.பியின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரொருவர் நேற்று 'உதயனு'க்குக் கூறினார்.

ஜே.வி.பியின் கோரிக்கைக்கமைய - ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவைப் பெறாமலிருக்க பிரதமர் மஹிந்த தீர்மானித்தால் ஜனாதிபதித் தேர்தலில் அக்கட்சி தனித்துப் போட்டியிடுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (க)

## கருத்தரங்கு

''சேது சமுத்திரத்திட்டத்தினால் சூழலில் ஏற்படவுள்ள மாற்றங்களும், விளைவுகளும்'' என்ற தலைப்பின் கீழான கருத்தரங்கு நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

பொருண்மிய மதியுரையகம், யாழ். பல்கலைக்கழகத்துடன் இணைந்து இக்கருத்தரங்கை ஏற்பாடுசெய்துள்ளது. (ஒ)

## ஜனாதிபதி - பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூடாதென்றும்-பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்திருக்கிறார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் செய்திகள் ஜனாதிபதிக்கு ஆதாரபூர்வமாகக் கிடைத்துள்ளதாக ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன. இது ஜனாதிபதியைச் சீற்றமடைய வைத்திருப்பதா கவும் தெரிகிறது.

பிரதமர் மஹிந்த கொண்டிருக்கும் கூட்டணி யோசனையை ஜனாதிபதி முற்றாக நிராகரித்திருக்கிறார். ஜே.வி.பியினருடன் மீண்டும் கூட்டுச் சேரக்கூடாது என்ற தனது கருத்தை அவர் மீண்டும் கட்சியின் உயர் உறுப்பினர்களிடம் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகிறார். கட்சியின் மூத்த அமைச்சர்கள் பலரும் கூட அவரது நிலைப்பாட்டுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையேதான் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வதற்கு வசதியாக சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவி தன்னிடம் இருக்கவேண்டும் என்று பிரதமர் விரும்புகிறார் என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள். ஆனால், கட்சித் தலைமைப் பதவியில் இருந்து விலகுவதற்கு ஜனாதிபதி தயாராகவே இல்லை. இதுவும் அவர்களிடையிலான முறுகல் முற்றுவதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. (க)

## ஜனாதிபதித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அக்கட்சியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தனது விருப்பத்தைக் கூட்டத்தில் வெளியிட்டார் எனவும் கூறப்பட்டது. எனினும், கட்சி யாப்பின் பிரகாரம் அதன் தலைவரோ, செயலாளரோ தேர்தலில் போட்டியிட முடியாது என்றும் கூறப்படுறது.

எனவே, கட்சியின் முன்னணி உறுப்பினர் ஒருவரை கட்சி ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்று எதிர்வு கூறப்படுகிறது.

ஆனால், ஜே.வி.பியுடன் எந்த உறவும் கூடாது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்தியுள்ளனர். ஜே.வி.பியினருடன் எதுவித உறவையும் வைத்துக் கொள்ளக்கூடாது என்று கட்சித் தலைவியான ஜனாதிபதியும் பிரதமருக்கு திட்டவட்டமாக உத்தரவிட்டுள்ளார் என்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்தன. இது பற்றியும் ஜே.வி.பி. உயர் மட்டம் ஆராய்ந்துள்ளது.

இதேவேளை, புதிய ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார நேற்றுப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து தாம் ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதாக உறுதியளித்துள்ளார். இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் பிரதமர் எடுத்துள்ள நிலைப்பாட்டை உடனடியாக அறிவிக்கவேண்டும். என்றும் அவர் கோரியுள்ளார். (க)

## கைகள் கட்டப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெபொன பொலீஸார் விசாரணை செய்து வருகின்றனர். நேற்று மாலைவரை சடலங்கள் அடையாளம் காணப்படாதபோதிலும் அந்த இரு சடலங்களும் தமிழ் இளைஞர்களுடையவைதான் என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது என்று பொலீஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

இரண்டு இளைஞர்களினதும் கைகள் வயர்களால் இறுக்கி கட்டப்பட்டுள்ளதுடன் அவர்களது உடலில் சித்திரவதை செய்யப் பட்டதற்கான அடையாளங்களும் உள்ளன என்று பொலீஸார் கூறினர்.

இராணுவத்தினருடன் இயங்கும் ஆயுத குழுவினரே இவர்களைக் கடத்திச் சென்றிருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மட்டக்களப்பு பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு தமிழ் இளைஞர்கள் கொழும்பில் வைத்து நேற்றுமுன்தினம் இனந்தெரியாத நபர்களினால் கடத்திச்செல்லப்பட்ட விடயத்தை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார்.

மட்டக்களப்பு - ஏறாவூர் பொலீஸ் பிரிவிற்குட்பட்ட சந்திவெளி பாடசாலை வீதியைச் சேர்ந்த கந்தையா சசிக்குமார் மற்றும் காத்தமுத்து நல்லதம்பி ஆகியோரே கடத்தப்பட்டுள்ளனர்.

மத்திய கிழக்கு நாடொன்றில் இருந்து இலங்கைவரும் தமது உறவினர் ஒருவரை வீட்டிற்கு அழைத்துவருவதற்காக இந்த இருவரும் கொழும்புக்குச் சென்றுள்ளன.

இவர்கள் இருவரையும் கொழும்பில் வைத்து விசாரணைக்குட்படுத்திய பொலீஸார் விசாரணைகளின் பின்னர் கட்டுநாயக்க விமான நிலையம் செல்ல அனுமதித்துள்ளனர்.

இதனையடுத்து இவர்கள் கட்டுநாயக்க சென்று உறவினரை அழைத்துவரும் வழியில், வெள்ளை நிற வானொன்றில் வந்து இவர்களை வழிமறித்த இனந்தெரியாத நபர்கள் அவர்கள் இருவரையும் தமது வானில் ஏற்றிக் கடத்திச் சென்றுள்ளனர்.

கடத்தப்பட்ட இருவரும் இன்னும் வீடு திரும்பவில்லை என்று உறவினர்கள் தெரிவித்ததையடுத்து இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலீஸ்மா அதிபரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கடத்தப்பட்ட இருவரையும் விடுவிப்பதற்குப் பொலீஸார் நடவடிக்கையெடுக்க வேண்டும் என்று ஜெயானந்தமூர்த்தி எம்.பி. கோரிக்கை விடுத்துள்ளார். (க)

## கதிர்காமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குரியது. தளையசிங்கத்தின் பக்கத்து வீட்டுத் தோட்டத்தில் வேலைசெய்யும் இந் தியத் தமிழர் ஒருவர் அடிக்கடி தளையசிங்கத்தின் வீட்டிற்கு போய்வருவார் எனத் தெரியவந்துள்ளது என்று பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அந்தத் தோட்டப் பணியாளரே கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளார். அவரின் வாக்குமூலத்தில் முரண்பாடுகள் உள்ளன என்றும் பொலீஸ்மா அதிபர் மேலும் கூறியுள்ளார்.

அதேவேளை, இப்படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படும் இரு வேறு தமிழ் இளைஞர்களையும் தாம் கைதுசெய்துள்ளனர் எனவும், இவர்களுக்கும் கிளிநொச்சிக்கும் நெருங்கிய தொடர்புகள் இருந்தன எனவும் பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்த இருவரும் கொலையாளிக்கு உதவியவர்கள். இனிக் கொலையாளியை மாத்திரமே கைதுசெய்யவேண்டியுள்ளது எனவும் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார். (க)


**27.08.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்**

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 300523139 இலிருந்து 300540802 வரை

சீட்டிழுப்பு இல. 1636

வெற்றி எண்கள்: 01 05 17 47 — சுப்பர் எண் 06

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.37,08,550/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 37,08,550/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 18 | 5,000/- | 90,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 485 | 1,000/- | 4,85,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,516 | 500/- | 7,58,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 22,874 | 40/- | 9,14,960/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 21,682 | 20/- | 4,33,640/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,24,800 | 10/- | 32,48,000/- |
| | | மொத்தம் | 79,29,600/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம்,பைசிக்கிள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 84,29,600/- |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 45,76,450/-

| | |
|---|---|
| குருநாகல் | 300529562-5-23 |
| களுத்துறை | 300539518-8-21 |
| மாத்தளை | 300536250-6-42 |
| அனுராதபுரம் | 300528927-1-52 |
| கொழும்பு | 300540156-3-70 |

இல. 33,செற்ற மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.



**CHEMISTRY DAY CLASS**

- அலகு ரீதியான மீட்டல்
- அலகு ரீதியான வினாவிடை
- மாதிரி வினாக்கள்
- அச்சடிக்கப்பட்ட பாடக்குறிப்புகள்
- 5 Model Exam
- 20 இற்கு மேற்பட்ட கருத்தரங்கு (39437)
- திங்கள் முதல் வெள்ளிவரை 10.00-11.30

கருத்தரங்கு 30/08/2005 செவ்வாய் 10a.m.

**NEW SCIENCE CENTRE** யாழ்நகர்.



5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையை முடித்துக்கொண்ட மாணவர்களே!

Online Classes.

விரும்பிய நேரத்தில் கற்கலாம். உங்களுக்காக நாம் விசேட கணனிக் கற்கைநெறிகளை ஆரம்பித்துள்ளோம்.

Start - 01/09/2005


| Levels | Age Level | Duration (hours) 03 Months | Monthly Fees |
|---|---|---|---|
| Level - 1 | 7to8 | 2 hrs x 2 days per week | Rs. 500/= |
| Level - 2 | 9+ | 2 hrs x 2 days per week | Rs. 500/= |
| Level - 3 | 10+ | 2 hrs x 2 days per week | Rs. 500/= |

**C.B Computer Academy**

T.P No. 021- 4590291 Station Road, Kondavil.


## மரண அறிவித்தல்

### திருமதி கோபாலன் பொன்மணி



யாழ்ப்பாணம்,கிடாய்விழுந்தானைப் பிறப்பிடமாகவும் தற்போது மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கோபாலன் பொன்மணி நேற்று (28.08.2005) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் பொன்னையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கோபாலன் (மெக்கானிக்)அவர்களின் அன்பு மனைவியும் நவநீதரன் (மெக்கானிக்),சிறிதரன், யசோதரன், வளர்மதி, மாலதி, வசந்தி, செல்வதி ஆகியோரின் அன்புத் தாயாரும் மோகனசுந்தர்,சிவாஸ்கரன் ,சிறினிவாசன்,ரவீந்திரன் ,கோமதி, சுதா, யாழினி ஆகியோரின் அன்பு மாமியாரும் பழனித்துரை கனகரத்தினம், செல்வராசா ஆகியோரின் சகோதரியும் குணபாலசிங்கம் ,கணேசலிங்கம், கனகரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மல்லாகம் நீதிமன்ற வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (29.08.2005) திங்கட்கிழமை 2 மணியவில் நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*நீதிமன்ற வீதி,*
*மல்லாகம்.*

(39435)(33-13-18)

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.